# ஆண்டறிக்கை

# 2016

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# நோக்கு

சிறுவர்களுக்கு சாதகமான மற்றும் பாதுகாப்பான சூழலொன்றை கட்டியெழுப்புதல்.

# செயற்பணி

சிறுவர்கள் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களில் இருந்தும் விடுதலை பெற்றிருப்பதை உறுதிசெய்தல்.



# தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| கலாநிதி திருமதி நடாஷா பாலேந்திர | தவிசாளர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,மாதிவெல, ஸ்ரீ ஜயவர்த்தனபுர |
| சட்டத்தரணி திரு சஜீவ சமரநாயக்க | பிரதி தவிசாளர்,<br>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,<br>இல. 330, தலவத்துகொட வீதி,மாதிவெல, ஸ்ரீ ஜயவர்த்தனபுர |
| டாக்டர் திரு எஸ்.பி. கந்தபொல ஆரச்சிகே | உளவியல் மருத்துவ நிபுனர்<br>ஆதார வைத்தியசாலை கம்பஹா |
| டாக்டர் திருமதி லிலந்தி டி சில்வா | சிறுவர் நோயியல் நிபுணர்,<br>கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,களுபோவில |
| டாக்டர் திரு யூ.ஏ.கே. தென்னக்கோன் | நீதிமன்ற மருத்துவ அலுவலர்,<br>நச்சுயியல் மற்றும் சட்ட மருத்துவ நிறுவகம்,<br>இல. 111, பிரான்சிஸ் வீதி,கொழும்பு 10 |
| கலாநிதி திரு ரீ. சுவீந்திரன் | உளவியலாளர்,<br>உலக சுகாதார ஸ்தாபனம்,கொழும்பு 07 |
| திரு கே. வைத்தியரத்ன | சிரேஷ்ட மேலதிக சொலிசிடர் ஜெனரல்,<br>சட்டமாஅதிபர் திணைக்களம்,கொழும்பு 12 |
| திரு எம்.ஆர். லத்தீப் | சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர்,<br>சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மாஅதிபர் அலுவலகம்,<br>பொலிஸ் தலைமையகம்,கொழும்பு 01 |
| திருமதி சந்திமா சிகேரா | ஆணையாளர்,<br>நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள்<br>திணைக்களம், IIஆம் கட்டம், செத்சிறிபாய, பத்தரமுல்லை |
| திருமதி.சாந்தனீ அமரதுங்க | தொழில் ஆணையாளர் நாயகம்,<br>தொழில் திணைக்களம்,<br>கொழும்பு 05 |
| திருமதி டி.எஸ். விஜேசேகர | மேலதிகச் செயலாளர்,<br>சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் அலுவல்கள்<br>அமைச்சு, IIஆம் கட்டம், செத்சிறிபாய, பத்தரமுல்லை |
| திரு ஆர்.எம்.ஏ. ரத்நாயக்க | மேலதிகப் பணிப்பாளர் நாயகம்,<br>திறைசேரி நடவடிக்கை திணைக்களம்,<br>நிதி அமைச்சு, கொழும்பு 01 |
| திரு சிறிவர்த்தன தஹநாயக்க | உறுப்பினர்<br>இல. 3280, கட்டம்III அநுராதபுரம் |
| திரு.எம்.டபிள்யு.ஜயவர்த்தன | உறுப்பினர்<br>இல. 2795 டி.எஸ். சேனாநாயக்க மாவத்தை,<br>கட்டம்III அநுராதபுரம் |
| திரு ஆர்.பி. அபேசிங்க | உறுப்பினர்<br>இல. 621 4 கொடகே மாவத்தை,அநுராதபுரம் |

## <u>தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2016 ஆம் ஆண்டிற்கான சபை உறுப்பினர்கள்</u>

| | |
|---|---|
| திருமதி பியுமந்தி பீரிஸ் | மேலதிக செயலாளர்,<br>நீதி அமைச்சு, கொழும்பு 12 |
| திரு எச்.யூ. பிரேமதிலக்க | மேலதிக செலயாளர்,<br>கல்வி அமைச்சு,<br>இசுருபாய, பத்தரமுல்ல |
| திரு எஸ்.சீ. விதான | மேலதிக செயலாளர்,<br>பாதுகாப்பு அமைச்சு,<br>சாரணர் மாவத்தை, கொழும்பு 03 |
| திருமதி ஏ.எம்.கே.கே. அத்தநாயக்க | மேலதிக செலயாளர்,<br>சுகாதார பாதுகாப்பு மற்றும் போசணை அமைச்சு,<br>இல. 385, சங்கைக்குரிய பத்தேகம<br>விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10 |
| திருமதி பீ.ஜே.டி. பெர்ணாந்து | சிரேஷ்ட உதவி செலயாளர்,<br>சமூக சேவைகள் மற்றும் சமூக<br>நலன்புரி அமைச்சு,<br>செத்சிறிபாய, பத்தரமுல்லை. |
| திருமதி யூ.எஸ்.கே. தெனாவத்த | மேலதிக செயலாளர்,<br>உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு,<br>இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 |
| திரு மஹாதேவ | ஆணையாளர்,<br>மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் பிரிவு,<br>தொழில் திணைக்களம், கொழும்பு 05 |
| திருமதி ஹேமா பெரேரா | சிரேஷ்ட உதவி செயலாளர்,<br>வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு,<br>இல. 163, கிருலப்பனை மாவத்தை,<br>பொல்ஹேன்கொட, கொழும்பு 05 |

# உள்ளடக்கம்


| | பக்க இல. |
|---|---|
| அறிமுகம் ................................................................................. | 01 - 02 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி ........................................ | 03 - 05 |
| அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு ...................................................... | 06 |
| 2016 ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நிறுவன ஒழுங்கமைப்பு ........ | 07 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2016 .......... | 08 - 09 |
| அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் ........................................................... | 10 - 50 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கொள்கை ......................................... | 10 |
| அரசியலமைப்பினுள் சிறுவர் பாதுகாப்பு விடயத்தை உட்புகுத்தல் ........................... | 10 |
| இரண்டாம் தர பாடசாலை பாடவிதானத்தில் வாழ்க்கைத் திறனை அறிமுகம் செய்தல் ... | 11 |
| சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாரபட்சம் காட்டல் பற்றிய சம்பவ ......................... | 11 |
| முகாமைத்துவத்துக்கான தேசிய வழிகாட்டல் தொகுப்புக்கு உதவி வழங்கல் ................. | 11 - 12 |
| இடையீட்டுக் கல்வி பற்றிய வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்தல் ..................... | |
| இலங்கைப் பாடசாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற சிறுவர்களை பண்புடையவர்களாக்கும் முறைகள் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளல் ................................................. | 12 |
| சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்தல .................................................................................. | 13 |
| சிறுவர் பாதுகாப்பு பாடநெறி (Child Care NVQ Level 4) ........................................ | 13 |
| கரையோர வலயங்களை மையமாகக் கொண்ட சிறுவர் பாதுகாப்பு முன்னோடிக் கருத்திட்டம் .................................................................................. | 13 |
| குற்றவியல் நீதியை நிலைநாட்டும் செயன்முறையை வலுவூட்டல் மற்றும் மேற்படி கட்டமைப்பை மென்மேலும் சிறுவர்களுக்கு சாதகமானதாக மாற்றியமைத்தல் ............... | 14 |
| சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல். ........................... | 14 |
| திடீர் அனர்த்த நிலைமைகளின்போது நடவடிக்கை மேற்கொள்ளல் ............................. | 15 |
| நிறுவனங்களை (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் .................................................................................. | 15 - 16 |
| சிறுவர்களுக்கு சாதகமான பாடசாலைச் சூழலை உருவாக்கல் ................................ | 16 |
| கிராமிய மட்டத்தில் சிறுவர்களின் பாதுகாப்பை வளர்ப்பதற்காக சமுதாய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் அலுவலர்கள் மற்றும் சமுதாயத்தினரின் திறன்களை விருத்தி செய்யும் நாடளாவிய நிகழ்ச்சித்திட்டம் ................................ | 17 |
| பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் .................................. | 18 |
| சுகாதார தொழில்சார் வல்லுநர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் .................. | 18 - 19 |
| தேசிய கல்வியியற் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம் .................................................................................. | 19 |
| சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தினத்தைக் கொண்டாடுதல் ................................ | 19 - 20 |
| சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினத்தைக் கொண்டாடும் தேசிய வைபவம் ... | 20 |
| சர்வதேச சிறுமியர் தினம் .................................................................................. | 21 - 22 |
| தகவல்களை பெற்றுக்கொடுத்தல் ........................................................... | 22 - 23 |
| சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை வெகுசன ஊடகங்கள் ஊடாக மக்களுக்கு கொண்டு செல்லல். .................................................................................. | 23 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றி சிறுவர்கள் மற்றும் பெரியவர்களை அறிவுறுத்துவதற்கான பாடசாலைகளுக்கு இடையிலான விவாதப் போட்டி ............................................ | 24 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியின் மாவட்ட போட்டிகள் நடாத்தப்பட்ட முறை .................................................................................. | 24 |
| சிறுவர் பாதுகாப்பு விவாதப் போட்டியின் சிங்கள மொழிமூலமான இறுதி 32 போட்டிகள் மற்றும் தமிழ் மொழி மூலமான இறுதி 32 போட்டிகளை நடாத்தல் .......................... | 25 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியின் சிங்கள மொழிமூல ஊடக செயலமர்வு... | 25 |
| சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியின் சிங்கள மொழிமூல ஊடக செயலமர்வு... | 26 |

சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியின் தொலைக்காட்சி ஒளிப்பதிவு மற்றும் ஒளிபரப்பு ........ 26 - 27
பாடசாலைகளுக்கு இடையிலான விவாதப் போட்டியின் விசேட சந்தர்ப்பங்கள் ........ 28
சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியின் இறுதிப் போட்டி ........ 28 - 30
சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியில் வெற்றியீட்டியர்களுக்கான பரிசுகளும், சான்றிதழ்களும் ........ 30
சிறுவர் பாதுகாப்பு பற்றிய குறுந்திரைப்படப் போட்டி ........ 30 - 31
சிறுவர் பாதுகாப்பு விடயம் தொடர்பில் பாடசாலை ஊடக அலகுகளை ஒருங்கிணைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம் ........ 31
கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்துதல் ........ 32
லபெந்தி புவத் ஹசுன (செய்திச் சஞ்சிகை) ........ 32
ஊடக பிரச்சார விளம்பரங்கள் ........ 33
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நூலகத்தை அபிவிருத்தி செய்தல் ........ 34
சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் வடிவமைக்கப்படுகின்ற புதிய இணையத்தளம் ........ 34
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்தல் ........ 35
சிறுவர் பாதுகாப்பு பற்றிய துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பதாதைகள் உட்பட அச்சு விடயங்களை வடிவமைத்தல் ........ 35
1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை ........ 36
சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள ........ 37
சட்டரீதியான பணிகள் ........ 38 - 39
சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிகளை வீடியோ ஒளிப்பதிவு செய்தல் ........ 39
இணையத்தள கண்காணிப்பு அலகை இயங்கச் செய்தல் ........ 39
2016 ஆம் ஆண்டின் இணையத்தள பாதுகாப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டம ........ 40
பொலிஸ் விசேட விசாரணைகள் ........ 41
2016 ஆம் ஆண்டு விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு நேரடியாகக் கிடைத்த முறைப்பாடுகள் ........ 41
இணையத்தளம் மற்றும் வேறு கையடக்கத் தொலைபேசிகளை முறைகேடாகப் பயன்படுத்துவதன் மூலம் சிறுவர்கள் பாலியல் ரீதியாக மற்றும் வேறு விதமாக ........ 41 - 42
துன்புறுத்தப்படுவது பற்றிய முறைப்பாடுகளைச் செய்யவென 0773220032 மற்றும் 0713220046 எனும் பிரத்தியோகமான இரண்டு தொலைபேசி இலக்கங்கள் ........ 42 - 43
உளவியல், சமூக நிகழ்ச்சித்திட்டம் ........
திடீர் அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர்களுக்கு சமூக உளவியல் உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல் ........ 43
சிறுவர்களை மையமாகக் கொண்ட நிலையங்கள் ........ 43
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2016.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான வருமான செலவினக்கூற்று ........ 44
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2016.12.31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று ........ 45 - 46
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2016.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசோட்டக்கூற்று ........ 47 - 48
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை 2016.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமைமாற்றம் பற்றிய கூற்று ........ 49 - 50
கணக்காய்வு அறிக்கை ........ 51 - 66

# அறிமுகம்

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது சிக்கலான சமூகப் பிரச்சினையாக சர்வதேச ரீதியில் மாற்றமடைந்துள்ளது. கணினி மற்றும் இணையத்தளத்தினைப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளதன் காரணமாக சிறுவர் துஷ்பிரயோகத்தை மேற்கொள்வதற்கு மேற்படி ஊடகத்தைப் பயன்படுத்தும் போக்கு காணப்படுகின்றது. இதன்போது இலங்கையில் நிலவுகின்ற சட்டரீதியான பின்னணி போதுமானதல்ல. அது தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இந்த ஆண்டில் கவனம் செலுத்தியுள்ளது.

1989 நவம்பர் மாதம் 20 ஆம் திகதி 'ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம்' உலகப் பிரகடனமாக நிறைவேற்றிக் கொள்ளப்பட்டது. இந்த சமவாயம் 54 பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், அதன் மூலம் உலகின் ஒவ்வொரு பிள்ளைக்கும் உரித்தாக வேண்டிய உரிமைகள் மற்றும் மேற்படி உரிமைகளை அமுல்படுத்துவதில் அரசுக்கு உரித்தான பொறுப்பும் விபரிக்கப்பட்டுள்ளது. சிறுவர் உரிமைகள் தொடர்பாகக் காணப்படுகின்ற சமூக நிலைமையை ஆராயும்போது, சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரத் தொழில், சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை நோக்கக்கொண்டு, சர்வதேச இரகசிய வியாபாரம் அதிகரிப்பது பற்றித் தீவிர கவனம் செலுத்தி, ஆயுதப் போராட்டங்களில் சிறுவர்கள் பலாத்காரமாக யுத்த சேவையில் ஈடுபடுத்தப்படல் அல்லது ஆட்சேர்ப்புச் செய்வதை சர்வதேச குற்றமொன்றாக குறிப்பிட்டு 2000 ஆம் ஆண்டு சிறுவர் உரிமைகள் சமவாயத்திற்கு, சிறுவர்களை ஆயுதப் போராட்டங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதைத் தடுத்தல் மற்றும் சிறுவர் வியாபாரம், சிறுவர் விபச்சாரம் மற்றும் சிறுவர்களை ஆபாசத் திரைப்படங்கள் மற்றும் வெளியீடுகளுக்குப் பயன்படுத்துவதை தடுத்தல் ஆகிய உபவரைவுகள் உள்ளடக்கப்பட்டன.

உலகில் காணப்பட்ட இந்தப் போக்குடன் இலங்கை அரசும் ஐக்கிய நாடுகளின் சிறுவர் சமவாயத்தில் 1991 ஆம் ஆண்டு கையொப்பமிட்டு தமது இணக்கப்பாட்டை தெரிவித்தது. அதற்கமைய, இலங்கையில் சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வது தொடர்பாக 1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய சனாதிபதி செயலணி தாபிக்கப்பட்டது. இதன்போது விடயங்களை ஆராய்ந்த மேற்படி குழு சிறுவர் துஷ்பிரயோகங்களை குறைப்பதற்குத் தத்துவமளிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றின் தேவை தொடர்பிலான சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அதற்கமைய 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சட்டத்தின் மூலம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தாபிக்கப்பட்டது. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆரம்பம் முதல் இன்று வரை சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுத்தல், சிறுவர் துஷ்பிரயோகங்களின் போது அது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீளசமூகமயப்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி நாட்டின் சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், 2004 டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அபிவிருத்திக்காக 2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலமும் அதிகாரசபைக்கு தத்துவங்கள் அளிக்கப்பட்டுளளன. மேலும் 2005 இன் 34 ஆம் இலக்க குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் சட்டத்தின் மூலமும் ஒரு பிள்ளை குடும்ப வன்முறைக்கு ஆளாகும் பட்சத்தில் அதிகார சபைக்கு அறியக் கிடைக்கும்போது மூன்றாம் தரப்பினராக அதில் தலையிட முடியும்.

சிறுவர்களின் உச்சளவான நலனுக்காக செயற்படுவதற்கு சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை துரிதமாக மற்றும் முறையாக அறிக்கையிடுவது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு 2010 யூலை 22 ஆம் திகதி "1929" இலங்கை சிறுவர் தொலைபேசி சேவையானது 24 மணிநேரமும் அமுல்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வளவில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து சமூகத்தில் மறைந்திருந்த சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதை அவதானிக்க முடிந்தது. இன்று இலங்கையின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதுடன், ஆலோசனைச் சேவைகளையும் இதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். இன்று இந்த தொலைபேசிச் சேவை மக்களுக்கு மிக நெருக்கமானதொன்றாக இயங்கிவருகின்றது.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் செயற்பணி


- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதும் அவ்வாறான துஷ்பிரயோகத்துக்கு ஆளாகின்ற சிறுவர்களை பாதுகாப்பதும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பது தொடர்பான தேசிய கொள்கையொன்றை தயார்செய்வதற்கு அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவதும்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
- அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளானவர்களை பாதுகாப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்.
- துஷ்பிரயோகத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக சிறுவர்களுக்கு உள்ள உரிமைகள் தொடர்பாகவும், சிறுவர் நெறிபிறழ்வைத் தடுப்பதற்கான முறைமை பற்றியும் அறிவுறுத்தல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கின்ற பணிக்கும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாவதில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கும் அவர்களின் உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், தேவையான சகல வகையிலுமான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அந்தப்பணிகளுக்கு உரிய அமைச்சுக்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், மாவட்ட, பிரதேச செயலாளர்களினதும் அரசாங்க, தனியார் துறையினரினதும், அமைப்புகளின் அறிவுரைகளை ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான தேசிய கொள்கையை பயன்மிக்கவாறு அமுல்படுத்துவதற்கு தேவையான சட்ட ரீதியான நிர்வாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல்.
- சகல வகையிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சட்டங்களை அமுல்படுத்துவதை ஒழுங்குபடுத்தல்.
- சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்களை ஒழுங்குபடுத்தல்.
- ஆயுத மோதல்களின் அழுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்கள் தொடர்பாக மனிதாபிமான அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை சிபாரிசு செய்வதும், அவர்களின் உடல் மற்றும் உளவியல் நலன்புரிக்கு நடவடிக்கை எடுப்பதும் உட்பட அவ்வாறான சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களை சமூகத்தில் மீள இணைத்துக் கொள்வதும்.
- குற்றங்கள் தொடர்பான புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள சிறுவர்களின் பாதுகாப்புக்கும் அரவணைப்புக்கும் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான மக்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்பதும் தேவையான சந்தர்ப்பங்களில் அந்த முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதும்.
- சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக மேற்கொள்கின்ற கடுமையான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்வது தொடர்பாக மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஆலோசனை வழங்குவதும் உதவி வழங்குவதும்.
- சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தேசிய தரவுக்கட்டமைப்பை தயார் செய்வதும் அதனை பேணிவருவதும்.
- சம்பந்தப்பட்ட அமைச்சுகள், வேறு நிறுவனங்களின் அலோசனைகளைப் பெற்று சிறுவர்களுக்கு சிறுவர் பாதுகாப்புச் சேவைகளை ஆற்றுகின்ற சகல சமய மற்றும் மத சார்பான நிறுவனங்களை கண்காணிப்புச் செய்வதும் அது தொடர்பான ஒழுங்குபடுத்தல்களும்
- சிறுவர் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ச்சிகளை நடாத்துவதும் மேம்படுத்துவதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.
- சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்கு தகவல்களை பெற்றுக்கொடுப்பதும் கல்வியை பெற்றுக்கொடுப்பதும்.
- சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்களை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து பிரிவுகளுடனும் கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்.
- சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான செயலமர்வுகள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்களை ஒழுங்குசெய்வதும் அதற்கான வசதிகளை செய்துகொடுப்பதும்.
- சகல வகையிலுமான சிறுவர் துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்துவதும், தடுப்பதும் அது தொடர்பாக வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் ஒருங்கிணைப்புகளைப் பேணி நடவடிக்கை மேற்கொள்வதும் தகவல்களை பரிமாற்றிக்கொள்வதும்.

# அதிகாரசபையின் ஒழுங்கமைப்பு

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைமையகத்தில் பின்வரும் அலகுகள் இயங்கிவருகின்றன.

- நிருவாகம் மற்றும் மனித வளப் பிரிவு
- நிதிப் பிரிவு
- திட்டமிடல் மற்றும் தகவல் பிரிவு
    - நூலகம்
- நிகழ்ச்சித்திட்டங்கள் பிரிவு
- உளவியல் சமூக பிரிவு
- சட்டப் பிரிவு
- சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவு
    - 1929 இலங்கை சிறுவர் தொலைபேசிச் சேவை
    - விசாரணை அலகு
    - மத்திய ஆவணக்காப்பகம்
- உள்ளகக் கணக்காய்வு பிரிவு
- விசேட பொலிஸ் விசாரணை பிரிவு

## 2016 ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நிறுவன ஒழுங்கமைப்பு



## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 2016

| இல. | பதவி | சம்பளக் குறியீடு | எண்ணிக்கை அங்கீகரிக்கப்பட்ட |
|---|---|---|---|
| 01 | பொது முகாமையாளர் | HM -2-1 | 01 |
| 02 | பிரதிப் பொது முகாமையாளர் | HM -1-3 | 01 |
| 03 | முகாமையாளர் - நிருவாகம் மற்றும் மனித வளம் | HM -1-1 | 01 |
| 04 | முகாமையாளர் - நிதி | HM -1-1 | 01 |
| 05 | முகாமையாளர் - சட்டம் | HM -1-1 | 01 |
| 06 | உளவியல் சிகிச்சை நிபுணர் | HM -1-1 | 01 |
| 07 | முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | HM -1-1 | 01 |
| 08 | முகாமையாளர் - நிகழ்ச்சித்திட்டம் | HM -1-1 | 01 |
| 09 | முகாமையாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | HM -1-1 | 01 |
| 10 | உதவி முகாமையாளர் - நிருவாகம் | MM -1-1 | 01 |
| 11 | உதவி முகாமையாளர் - சட்டம் | MM -1-1 | 01 |
| 12 | உதவி முகாமையாளர் - நிகழ்ச்சித்திட்டம | MM -1-1 | 01 |
| 13 | உதவி முகாமையாளர் - உளவியல் | MM -1-1 | 01 |
| 14 | உதவி முகாமையாளர் - திட்டமிடல் மற்றும் தகவல் | MM -1-1 | 01 |
| 15 | உதவி முகாமையாளர் - தகவல் மற்றும் ஊடகம் | MM -1-1 | 01 |
| 16 | உதவி முகாமையாளர் - சட்டத்தை அமுல்படுத்தல் | MM -1-1 | 01 |
| 17 | கணக்காளர் | MM -1-1 | 01 |
| 18 | உள்ளக கணக்காய்வாளர் | MM -1-1 | 01 |
| 19 | பணிப்பாளர் சபை செயலாளர் | JM – 1-1 | 01 |
| 20 | நிருவாக அலுவலர் | JM – 1-1 | 01 |
| 21 | நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | JM – 1-1 | 01 |
| 22 | கணக்கு அலுவலர் | JM – 1-1 | 01 |
| 23 | புலனாய்வு அலுவலர் | JM – 1-1 | 01 |
| 24 | தகவல் மற்றும் ஊடக அலுவலர் | JM – 1-1 | 01 |
| 25 | திட்டமிடல் மற்றும் ஒழுங்குறுத்தல் அலுவலர் | JM – 1-1 | 01 |
| 26 | ஆராய்ச்சி மற்றும் நலன்புரி அலுவலர் | JM – 1-1 | 01 |
| 27 | மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) | MA - 4 | 01 |
| 28 | மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) | MA - 4 | 01 |
| 29 | மாவட்ட சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் | MA - 3 | 25 |
| 30 | மாவட்ட உளவியல் சமூக உத்தியோகத்தர் | MA - 3 | 25 |
| 31 | பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் | MA - 3 | 360 |
| 32 | நிருவாக உதவியாளர் | MA - 3 | 01 |
| 33 | கணக்குகள் உதவியாளா | MA - 3 | 03 |
| 34 | ஊடக உதவியாளர் | MA - 3 | 03 |
| 35 | நூலகர் | MA - 3 | 01 |
| 36 | திட்டமிடல் உதவியாளர் | MA - 3 | 01 |
| 37 | சட்ட உதவியாளர் | MA - 3 | 03 |
| 38 | புலனாய்வு உதவியாளர் | MA - 3 | 02 |
| 39 | ஆலொசனை உதவியாளர் | MA - 3 | 04 |
| 40 | நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | MA - 3 | 03 |
| 41 | வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்யும் உதவியாளர் | MA - 3 | 01 |
| 42 | இணையத்தள பரிசோதனை உதவியாளர் | MA - 3 | 01 |
| 43 | சிகிச்சையளிக்கும் மருத்துவர் | MA - 3 | 03 |
| 44 | வீடியோ தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 01 |
| 45 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) | MA – 2-1 | 15 |
| 46 | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | MA – 2-1 | 02 |
| 47 | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்சாரா) | MA – 1-1 | 32 |
| 48 | சாரதி | PL-3 | 07 |
| 49 | செய்தி கொண்டுசெல்பவர்(தூதுவர்) | PL-1 | 01 |
| 50 | உதவியாளர் அலுவலக சிற்றூழியர் | PL-1 | 03 |
| 51 | அலுவலக தொழிலாளி | PL-1 | 02 |
| | **மொத்தம்** | | **527** |

# அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கொள்கை

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் பிரதான செயற்பணியொன்றான சிறுவர் பாதுகாப்பு பற்றிய தேசிய கொள்கையைத் தயார் செய்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொள்கின்றது. அதற்கமைய, சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான தேசிய கொள்கையைத் தயார் செய்வது தொடர்பில் அதிகாரசபையின் தவிசாளர் உள்ளிட்ட பணிப்பாளர் சபை, கிளை குழு அங்கத்தவர்களின் கருத்துக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன. மேலும் சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான துறைசார் நிபுணர்கள் மற்றும் சிறுவர்களுடன் நெருக்கமாக நடவடிக்கை மேற்கொள்கின்ற கல்வி, சுகாதாரம், நீதி, தொழில் மற்றும் சட்டமும், ஒழுங்கும் அமுல்படுத்தும் அமைச்சு மட்டத்தில் கருத்துக்கள் வினவுவது 2016 ஆம் ஆண்டில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது. சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான நீதிமன்ற நடவடிக்கைகளின் போது குற்றவியல் நியாயத்தை நிலைநாட்டும் செயன்முறை மற்றும் அது தொடர்பிலான விதிவிலக்குகள் தொடர்பில் பொலிஸ், சிறுவர் மற்றும் மகளிர் பணியகம், சட்டமாஅதிபர் திணைக்களம், நீதி அமைச்சின் அலுலவர்களின் கருத்துக்களும் திரட்டப்பட்டன. சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர்களை நிறுவனமயப்படுத்துவது தொடர்பில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் தொழில்வல்லுனர்களின் கருத்துக்களையும் திரட்டி தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கையைத் தயார் செய்வதற்கான அடிப்படை ஏற்பாடுகள் சட்டப் பிரிவினால் 2016 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

## அரசியலமைப்பினுள் சிறுவர் பாதுகாப்பு விடயத்தை உட்புகுத்தல்

பிள்ளையை மையமாகக் கொண்ட செயற்பாடுகளை நாட்டினுள் ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு அரசியலமைப்பில் சிறுவர்களை மையமாகக் கொண்ட நிகழ்ச்சிநிரலொன்றின் அவசியத்தன்மை பற்றிய தேசிய வேலைத்திட்டமொன்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்றது. இது பற்றிய சில பிரேரணைகளை அரசிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சிறுவனின் உச்சளவான நலன் தொடர்பில் எல்லாச் சந்தர்ப்பத்திலும் கவனம் செலுத்தி அதற்காக சகல தரப்பினர்களினதும் ஒருங்கிணைப்பை நடைமுறைப்படுத்துவது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனூடாக சிறுவர்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், சிறுவர்களின் உச்சளவான நலன் மற்றும் அவர்களுக்கு பலம்மிக்க ஆளுமையை உரித்தாக்கிக் கொடுப்பதில் தாக்கம் செலுத்துகின்ற நேரடியான கொள்கைகள் சிலவற்றை சமூகமயப்படுத்துவதை நாம் இதன் மூலம் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

## இரண்டாம் தர பாடசாலை பாடவிதானத்தில் வாழ்க்கைத் திறனை அறிமுகம் செய்தல்

கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் மற்றும் அதிகாரசபை ஆகியன இணைந்து பிள்ளையின் ஆரம்பக் கல்வி முதல் வாழ்க்கைத் திறனை அறிமுகம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன. இதன் நோக்கமாக இருப்பது பிள்ளையினுள் உளவியல்சார் அறிவை கட்டியெழுப்பல் மற்றும் தன்னம்பிக்கையை ஏற்படுத்துவதாகும். தீர்மானம் மேற்கொள்ளல், பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளல், ஆக்கபூர்வமான சிந்தனை, தர்க்க ரீதியான சிந்தனை, ஆட்களுக்கு இடையிலான உறவு, சுய புரிந்துணர்வு, தயவு மனப்பான்மை, உணர்வு முகாமைத்துவம் மற்றும் அழுத்த முகாமைத்துவம் போன்ற விடயங்களின் ஊடாக சிறுவர்கள் கற்றுக்கொள்கின்றனர். இதற்குத் தேவையான ஆசிரிய பயிற்சிப் பாடநெறிகளைத் தயார் செய்வதற்கு தேசிய கல்வி நிறுவகத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் இது நிறைவு செய்யப்பட்டது. இது தொடர்பில் 2016 ஆம் ஆண்டில் ஆசிரியர்களை அறிவுறுத்தும் 5 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. அறிவுறுத்தப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 372 ஆகும். இதற்கு மேலதிகமாக இரண்டாவது மற்றும் மூன்றாவது தரத்தின் பாடவிதானம் தொடர்பில் சிறுவர் பாதுகாப்பு மற்றும் ஆளுமை அபிவிருத்தி சம்பந்தமாக உரிய ஆசிரிய ஆலோசகர்களை பயிற்றுவிப்பதற்கான 03 வீடியோ தொகுப்புக்களை தயார் செய்யும் ஆரம்பப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாரபட்சம் காட்டல் பற்றிய சம்பவ முகாமைத்துவத்துக்கான தேசிய வழிகாட்டல் தொகுப்புக்கு உதவி வழங்கல்

சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் பாரபட்சம் காட்டல் தொடர்பிலான சம்பவ முகாமைத்துவத்தின் போது பூரணமான அணுகுமுறையொன்றுக்கு அவசியமான சிறுவர் மருத்துவ நிபுணர்களினால் தயார் செய்யப்பட்ட வழிகாட்டல்களும், நாடளாவிய ரீதியில் அமுல்படுத்தும் நோக்கத்துடன் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு உட்பட ஏனைய தரப்பினர்கள் ஒன்றிணைந்து சமர்ப்பிக்க அதிகாரசபை ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இதற்கான ஆரம்பகட்ட பணிகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

## இடையீட்டுக் கல்வி பற்றிய வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்தல்

கல்வி அமைச்சு மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஆகியன இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் முறையான பாடசாலைக் கட்டமைப்பிலிருந்து விலகிச் செல்லும் அச்சுறுத்தலுக்கு ஆளாவதற்குக் காரணமாக அமைகின்ற விடயங்களைத் தவிர்த்து அவர்களை பாடசாலைக் கட்டமைப்பினுள் முனைப்புடன் தடுத்துவைத்திருப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் தொடர்பில் கல்வித் துறையின் கல்வி நிருவாக அதிகாரிகளுடன் கலந்துரையாடி தகுந்த நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயார் செய்ய வேண்டியதன் அவசியத்தன்மையை வலியுறுத்துவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு சிறுவர்களை இனங்காண்பதற்கான தகவுதிறன்கள், பாடசாலைக் கல்வியிலிருந்து விடுபடுகின்ற அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள சிறுவர்கள் இனங்காணப்படுகின்ற போது அதற்குத் தீர்வு காண்பதற்கான பொறுப்பு அளிக்கப்படுகின்ற அலுவலர்கள் மற்றும் அவர்களின் செயற்பணிகளை நிர்ணயித்துக் கொள்ளல் போன்ற விடயங்கள் தொடர்பிலான தகவல்களை உள்ளடக்கிய வழிகாட்டல் தொகுப்பொன்றைத் தயார் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், அதற்கான அடிப்படையை ஏற்படுத்துவது இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

## சிறுவர் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வழிகாட்டல் தொகுப்பொன்றைத் தயார் செய்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் 2016 ஆம் ஆண்டில் சிறுவர் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வூட்டுவதற்கான வழிகாட்டல் தொகுப்பை வடிவமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. பிரதானமாக அரச மற்றும் அரசசார்பற்ற துறைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான மற்றும் சமுதாய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்ற அலுவலர்களுக்காக கூட்டு ஆணுகுமுறையை நோக்காகக் கொண்டு இந்த வழிகாட்டல் தொகுப்பு திட்டமிடப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப கட்டமாக இந்த வழிகாட்டல் தொகுப்பை வடிமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக 16 மாவட்டங்களில் சிறுவர்களின் விடயங்கள் தொடர்பில் செயற்படுகின்ற அரச மற்றும் அரசசார்பற்ற அலுவலர்களுடன் நேர்முகக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதில் சிறுவர்களும் பங்கேற்றனர். அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் தொழில்வல்லுனர்கள் 155 பேர், சிவில் அமைப்புக்களின் அங்கத்தவர்கள் 236 பேர் மற்றும் சிறுவர்கள் 28 பேரின் கருத்துக்கள் இதற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

## இலங்கைப் பாடசாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற சிறுவர்களை பண்புடையவர்களாக்கும் முறைகள் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொள்ளல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் இலங்கையில் பாடசாலைகளில் பயன்படுத்தப்படுகின்ற சிறுவர்களை பண்புடையவர்களாக்கும் முறைகள் பற்றிய ஆராய்ச்சிக் கற்கையை மேற்கொள்ளத் தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கைகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன. சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்களுடன் அதிகாரசபை ஒன்றிணைந்து பாடசாலைகளில் காணப்படுகின் ஒழுக்கம்

சம்பந்தமான செயற்பாடுகள் மற்றும் அவற்றின் விளைதிறன் எந்தளவுக்குக் காணப்படுகின்றது என்பது பற்றிய கற்கைக்கான ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகின்றது. ஒழுக்கத்திற்காக கடும் தண்டனைகளுக்குப் பதிலாக சாதகமானவாறு ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வியியலாளர்களை இதன் மூலம் விழிப்புணர்வூட்டுவதற்கு இயலுமாகும்.

## சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டல் தொகுப்பைத் தயார் செய்தல்

கொள்கை திட்டமிடல் அமைச்சு, பிரதமர் அலுவலகம், சிறுவர் செயலகம் மற்றும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை முன்னோடியாகச் செயற்பட்டு பகல்நேர பராமரிப்பு நிலையங்களைத் தரப்படுத்தல் மற்றும் பாதுகாப்பான சிறுவர்களுக்கு நட்புறவான சூழலைக் கட்டியெழுப்புவதற்கான தேசிய வழிகாட்டலைத் தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்கின்றது. வரைவைத் தயார் செய்யும் பணி 2016 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டது.

## சிறுவர் பாதுகாப்பு பாடநெறி (Child Care NVQ Level 4)

2016 ஆம் ஆண்டில் ரூ.மி. 50 ஆன தொகை சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குவோரின் கடமைகளை தரப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சிறுவர் பகல்நேர பராமரிப்பு நிலையங்கள் தொடர்பிலான தேசிய வழிகாட்டிக்கு இசைவாக சிறுவர் அரவணைப்பு சான்றிதழ் பாடநெறி (NVQ 4) தயார் செய்யப்பட்டு அறிமுகம் செய்யப்பட்டது. அதற்கமைய தொழில் பயிற்சி அதிகாரசபை (VTA) 5 மாவட்டங்களில் (கொழும்பு, களுத்துறை, கண்டி, காலி மற்றும் கிளிநொச்சி) தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA) 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையிலும் இந்தப் பாடநெறியை ஆரம்பித்து நடாத்தி வருகின்றன. இந்தப் பாடநெறியை நடாத்துவதற்கு தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட புதிய ஆலோசகர்களுக்கான பயிற்சியும் (TOT) நடாத்தப்பட்டது. இந்தப் பாடநெறி 12 மொடியுல்களைக் கொண்டுள்ளதுடன், இதற்கான பயிற்சிக் கையேடும் தயார் செய்யப்பட்டுள்ளது.

## கரையோர வலயங்களை மையமாகக் கொண்ட சிறுவர் பாதுகாப்பு முன்னோடிக் கருத்திட்டம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்திற்கு அமைய சிறுவர் துஷ்பிரயோகங்களுக்குள்ள வாய்ப்புக்களை குறைப்பதற்காக சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் சம்பந்தமான சகல பிரிவுகளும் கலந்துரையாடலில் ஈடுபடுவதற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதனால் 2016 ஆம் ஆண்டில் ஹிக்கடுவ பிரதேசத்தில் நாரிகம வெல்லபட பிரிவில் கரையோர வலயங்களை மையமாகக் கொண்ட சிறுவர் பாதுகாப்பு பற்றிய விசேட முன்னோடிக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

## குற்றவியல் நீதியை நிலைநாட்டும் செயன்முறையை வலுவூட்டல் மற்றும் மேற்படி கட்டமைப்பை மென்மேலும் சிறுவர்களுக்கு சாதகமானதாக மாற்றியமைத்தல்

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் இடம்பெறுகின்ற குற்றங்களுக்கு நீதியை நிலைநாட்டும் செயன்முறையை மென்மேலும் சிறுவர்களுக்குச் சாதகமானதாக மாற்றியமைப்பதற்குத் தேவையான பின்னணியை தயார் செய்வதற்கு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொள்கின்றது. அத்துடன் நீதிமன்ற செயன்முறையை மென்மேலும் விளைதிறன்மிக்கதாக்கும் பொருட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு, கூடிய விரைவில் தீர்ப்பு வழங்கி முடிப்பதற்குத் தேவையான வசதிகள் மற்றும் வளங்கள் தொடர்பில் பொலிஸ் மற்றும் சட்டமாஅதிபர் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்வதற்கு இதன்போது நாம் எதிர்பார்கின்றோம்.

அத்துடன், பெண் பிள்ளை 14 வயது அல்லது அதற்கு மேற்பட்டதாக மற்றும் ஆண் பிள்ளை 18 வயதுக்குக் குறைவானதாக இருக்கும் சந்தர்ப்பத்தில் வன்புணர்வு தொடர்பில் தாக்கல் செய்யப்படுகின்ற வழக்கு நடவடிக்கைகளின்போது ஆண் பிள்ளை தவறை ஏற்றுக் கொள்ளுமாயின் நீதவான் இடைநிறுத்தப்பட்ட சிறைத்தண்டனையை வழங்கக்கூடியவாறு சட்டங்களைத் திருத்துவதற்கான வரைவு அதிகாரசபையினால் சட்டமாஅதிபரிடம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் காணப்படுகின்ற சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்திற்கு உரித்தான நடவடிக்கைகளை மென்மேலும் விளைதிறன்மிக்கவாறும், சிறுவர்களுக்கு நட்புறவான சூழலை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு அதற்கு விசேட பயிற்சி பெற்றுள்ள பதவியணியை நியமனம் செய்துகொள்வதற்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தமது ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை வழிநடாத்துகின்றது.

## சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

சுனாமி அனர்த்தத்தின் விளைவாக பெற்றோரை இழந்துள்ள 21 வயதிற்கு குறைவான ஒவ்வொரு பிள்ளைக்கும், இளைஞர்களுக்குமான நலன்புரி நடவடிக்கைகள் பற்றி இதன் கீழ் கவனம் செலுத்தப்படுகின்றது. பெற்றோர் இருவரில் ஒருவரையேனும் இழந்துள்ள மற்றும் உயிர்வாழும் தாய் அல்லது தந்தைக்கு பாதுகாப்பதற்கு அல்லது அரவணைப்பதற்கு ஆற்றல் இல்லாத ஒவ்வொரு பிள்ளைக்கும், இளைஞருக்கும் 2005ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் அரவணைப்பைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான கெப்பகரு பெற்றோர் பாதுகாவலர் அரவணைப்பு நடவடிக்கைகள், பின்னாய்வு நடவடிக்கைகள் மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 ஆம் ஆண்டில் சனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை ஒவ்வொரு மாதமும் ரூ. 5000 வீதம் சுனாமி கெப்பகரு பெற்றோர் அரவணைப்பைப் பெறுகின்ற பிள்ளைகள் 118 பேருக்காக அதிகாரசபையினால் ரூ. 6,205,000.00 ஆன தொகை கல்வி உதவியாக வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சமர்ப்பித்த பல்வேறு தேவைகள் தொடர்பிலான கோரிக்கைகள் சம்பந்தமாக தையல் இயந்திரம் பெற்றுக்கொடுத்தல், உயர் கல்விப் பாடநெறிகளுக்கான பாடநெறிக் கட்டணங்களைச் செலுத்தல், தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்துவதும் மேற்கொள்ளப்பட்டது.

## திடீர் அனர்த்த நிலைமைகளின்போது நடவடிக்கை மேற்கொள்ளல்

வெள்ளம், சூறாவளி, மண்சரிவு, பூமிஅதிர்ச்சி மற்றும் சுனாமி நிலைமைகள் காரணமாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனர்த்த நிலைமை ஏற்பட முடியும். அவ்வாறான அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர்கள் கடும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர். எனவே அனர்த்த நிலைமையின்போது சிறுவர்களை அரவணைப்புச் செய்வது விசேட கவனத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டும். இங்கு முகாம்களில் சிறுவர்களின் உளவியல் சுகாதாரத்தை மேம்படுத்தல் மற்றும் அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறுவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

இந்த ஆண்டில் அரணாயக்கவில் இடம்பெற்ற மண்சரிவு திடீர் நிலைமை மற்றும் கொழும்பு சுற்றுப்புறச் சூழலில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் முகாம்களில் இருப்பவர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட அலுவலர்கள், தலைமை அலுவலக அலுவலர்கள் மற்றும் உளவியல் சமூகப் பிரிவின் அலுவலர்கள் இதில் பங்கேற்றனர்.

இந்த முகாம்களில் இருக்கின்ற சிறுவர்களுக்குத் தேவையான ஆலோசனை, உளவியல் சமூகத் தலையீடுகள் மற்றும் துஷ்பிரயோகங்களிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ளத் தேவையான

விழிப்புணர்வூட்டல் மேற்கொள்ளப்பட்டன. இந்த முகாம்கள் இயங்கிவந்த காலப்பகுதிக்குள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளர் மற்றும் பிரதித்தவிசாளரின் தலைமையில் ஊழியர் நலன்புரிச் சங்கத்தினால் அதிகாரசபையின் அலுவலர்கள் இந்த முகாம்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றும் அமுல்படுத்தப்பட்டது.

## சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குகின்ற மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களை (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

நாட்டில் சிறுவர்களில் பாதுகாப்பானதன்மையை ஏற்படுத்துவதற்காக தாபிக்கப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இன்று பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் இந்த நோக்கத்தை நிறைவேற்றி வருகின்றது. 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் (14) க பிரிவுக்கு அமைய சிறுவர்களுக்கு சிறுவர் அரவணைப்புச் சேவைகளை வழங்குகின்ற சகல சமய மற்றும் அறக் கட்டளை நிறுவனங்களையும் (சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்) கண்காணிப்புச் செய்தல் மற்றும் ஒழுங்குறுத்துவது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களுக்கு உச்சளவில் நலனைச் செய்துகொடுப்பதற்காக சிறுவர் இல்லங்கள் கண்காணிப்புச் செய்யப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் 254 சிறுவர் இல்லங்கள் இவ்வாறு கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டன.

### சிறுவர்களுக்கு சாதகமான பாடசாலைச் சூழலை உருவாக்கல்

பாடசாலை சிறுவர்களை சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வது பற்றிய அறிவு, புரிந்துணர்வு, திறமைகளை பாடசாலை சமுதாயத்தில் மற்றும் சிறுவர்களில் வளர்த்தல் மற்றும் அதற்கு அவர்களை வலுவூட்டுவதற்காக பாடசாலை மட்டத்திலான பொறிமுறையொன்றை ஏற்படுத்துவதன் மூலம் சிறுவர்களின் நல்ல நிலைத்திருத்தல் அபிவிருத்தி செய்யப்படுகின்ற சூழலை பாடசாலையினுள் ஏற்படுத்துவதும், அதற்காக செயற்படுகின்ற பாடசாலை சமுதாயமொன்றை உருவாக்குவதும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது, பல கட்டங்களாக அமுல்படுத்தப்பட்டது. அதற்கமைய முதற் கட்டத்தின் கீழ் ஏற்கெனவே பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளதுடன், கல்வி வலயமொன்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 15 பாடசாலைகளிலிருந்து ஒரு பாடசாலை அதிபர் ஒருவர், ஆசிரியர் ஒருவர் மற்றும் மாணவர்கள் 02 பேர் என்ற வகையில் 60 பேர் கொண்ட குழுவுக்கு ஒரு நாள் விசேட பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கமைய 2016 ஆம் ஆண்டில் முதற் கட்டத்தின் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 80 நடாத்தப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 4228 ஆகும்.

இரண்டாம் கட்டத்தின் கீழ் ஒரு பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய குழு செய்ய வேண்டிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் முதலில் அவர்களை அறிவுறுத்துவதும், அதன் பின்னர் இது தொடர்பில் சமர்ப்பிக்கப்படுகின்ற வழிகாட்டலைப் பயன்படுத்தி மேற்படி குழுவினால் ஆசிரியர்கள் 05 பேர், பெற்றோர் 05 பேர், மாணவர்கள் 20 பேர் (6 ஆம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புக்களை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில்) என்ற வகையில் 20 பேர் கொண்ட குழுவை இலக்காகக் கொண்டு ஆரம்ப விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய, 164 விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இதன் பயனாளிகளின் எண்ணிக்கை 4764 ஆகும்.

மூன்றாம் கட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தை மதிப்பீடு செய்தல் மற்றும் பின்னாய்வு செய்வதன் மூலம் தொடர்ந்தும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை எவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும் என்பது பற்றி ஆராயப்படும். அதற்கமைய 2016 ஆம் ஆண்டினுள் பின்னாய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் 100 நடாத்தப்பட்டுள்ளன. மேலும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையும், கல்வி அமைச்சும் இணைந்து நாடு முழுவதிலும் பாடசாலைகளில் அமுல்படுத்துகின்ற 'சுரகும் பவுர' எனும் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களைத் தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2016 ஆம் ஆண்டில் 1112 பாடசாலைகளில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.




## கிராமிய மட்டத்தில் சிறுவர்களின் பாதுகாப்பை வளர்ப்பதற்காக சமுதாய நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் அலுவலர்கள் மற்றும் சமுதாயத்தினரின் திறன்களை விருத்தி செய்யும் நாடளாவிய நிகழ்ச்சித்திட்டம்

ஒவ்வொரு பிள்ளையையும் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாப்பது பற்றிய அறிவு, புரிந்துணர்வு மற்றும் திறமைகளை சமுதாயம் மற்றும் சிறுவர்கள் மத்தியில் வளர்த்தல் மற்றும் அதற்காக சமுதாய அபிவிருத்திக்காக செயற்படுகின்ற அலுவலர்கள், அரசசார்பற்ற அமைப்புக்களின் அலுவலர்கள் மற்றும் சமுதாயத்தை அறிவுறுத்துவதன் மூலம் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்திலான பொறிமுறையை ஏற்படுத்துவதன் மூலம் சிறுவர்களின் வாழ்க்கைக்குப் பாதுகாப்பான சூழலை கிராமிய மட்டத்தில் உருவாக்குவதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். இதன்போது முக்கியமாக சிறுவர்களின் பாதுகாப்பில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கீழ்மட்ட காரணிகளை மாற்றியமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும். அதற்கமைய, பெற்றோர் வெளிநாடு செல்லல், வறுமை, இலத்திரனியல் ஊடகப் பயன்பாடு, புரிந்துணர்வின்மை மற்றும் மனப்பாங்கு, பெற்றோருக்கு இடையிலான பிணக்குகள், மதுப் பயன்பாடு மற்றும் புகைப்பிடித்தல், குடும்பத்தில் மகிழ்ச்சியின்மை மற்றும் ஒற்றுமையின்மை, வீடு, சூழல் மற்றும் கலாசாரம் போன்ற காரணிகளுடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது எவ்வாறு என்பது பற்றிக் கலந்துரையாடப்படும். அதற்கேற்ப, 2016 ஆம் ஆண்டில் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களின் அலுவலர்களுக்காக விழிப்புணர்வூட்டும் 150 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இதனூடாக அறிவுறுத்தப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 7445 ஆகும். மேலும் 2016 ஆம் ஆண்டில் சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் 172 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், விழிப்புணர்வூட்டப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை 8371 ஆகம்.

## பொலிஸ் அலுவலர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

ஒவ்வொரு பிள்ளையையும் சகல வகையிலுமான துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாப்பது பற்றிய அறிவு, புரிந்துணர்வு மற்றும் திறமைகளை பொலிஸ் அலுவலர்கள் மத்தியில் வளர்ப்பதற்காக இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டது. அதற்கமைய 2016 ஆம் ஆண்டில் சமுதாய பொலிஸ் அலுவலர்கள் மற்றும் பொலிஸ் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்தைச் சேர்ந்த அலுவலர்கள் 1,859 பேருக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 13 நடாத்தப்பட்டுள்ளன.





## சுகாதார தொழில்சார் வல்லுநர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்

சுகாதாரத் தொழில்சார் வல்லுநர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் உரிமைகள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி தொடர்பிலான அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்றதொரு நிகழ்ச்சித்திட்டமாகும். சுகாதாரத் தொழில்சார் வல்லுனர்களை சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு துறைகளிலும் அறிவும், ஆற்றலும் மிக்கவர்களாக மாற்றியமைப்பதன் மூலம் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் மென்மேலும் உணர்வுப்பூர்வமான ஆட்களை உருவாக்கல், அரச அலுவலர் என்ற வகையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களின் போது அல்லது அவ்வாறான அச்சுறுத்தலான நிலைமையின் போது செயற்பட வேண்டிய முறை பற்றிய உரிய அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை அபிவிருத்தி செய்வதன் மூலம் மென்மேலும் பயன்மிக்கவாறு மேற்படி சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்பை மேற்கொள்ளத் தேவையான வழிகாட்டலை மேற்கொள்ளல் மற்றும் சுகாதார தொழில்சார் வல்லுனர்கள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் கொண்டுள்ள உறவை வலுவூட்டுவதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் குறைத்தல் ஆகியனவாகும். இதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் குடும்ப சுகாதார சேவை அலுவலர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பட்டப் பின் மருத்துவப் பட்டத்தைக் கற்றுஇருக்கின்ற மருத்துவர்களுக்கான 08 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், அதன் மூலம் அறிவுறுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 479 ஆகம்.





## தேசிய கல்வியியற் கல்லூரிகளின் ஆசிரிய மாணவர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் ஆசிரிய மாணவர்களை அறிவுறுத்துகின்ற நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஆசிரிய தொழிலில் பிரவேசிப்பதற்கு உத்தேசித்துள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயில்கின்ற ஆசிரிய மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு பற்றிய அறிவையும் மற்றும் ஆற்றல்களையும் பெற்றுக்கொடுப்பதன் ஊடாக சிறுவர்கள் தொடர்பில் உணர்வுபூர்வமான மற்றும் அறிவுமிக்க ஆசிரியர் சமுதாயம் ஒன்றை உருவாக்குவதாகும். 2016 ஆம் ஆண்டு 09 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், இதன் மூலம் ஆசிரிய மாணவர்கள் 2,172 பேர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.





## சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தினத்தைக் கொண்டாடுதல்

இலங்கை 2009 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் சனவரி 04 ஆம் திகதியை சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினமாக பிரகடனம் செய்துள்ளது. 2016 ஆம் ஆண்டில் சிறுவர் துன்புறுத்தலுக்கு எதிரான தேசிய தினத்தை முன்னிட்டு ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், இணையத்தளம் மற்றும் சமூக வலைதளங்கள் ஊடாக


தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
National Child Protection Authority

விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் மூலம் துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான முறையியல்கள் பற்றி சமுதாயத்தினர் அறிவுறுத்தப்பட்டனர். குறிப்பாக சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் அறிவிப்பதற்காக இந்நாட்டில் காணப்படுகின்ற துரித பொறிமுறையான 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை பற்றி சமுதாயத்தினர் இங்கு அறிவுறுத்தப்பட்டனர்.

## சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினத்தைக் கொண்டாடும் தேசிய வைபவம்

2016 யூன் மாதம் 12 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற சிறுவர் ஊழியத்துக்கு எதிரான சர்வதேச தினத்தை முன்னிட்டு "சிறுவர்களை பாலியல் ஊழியர்களாகப் பயன்படுத்துவதை ஒழிப்போம். சிறுவர்களுக்கு அவர்களின் உலகத்தை உரித்தாக்கிக் கொடுப்போம்" எனும் தொணிப்பொருளின் கீழ் விசேட செயலமர்வொன்று 2016.09.15 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளவில் நடைபெற்றது.

இந்த மாநாட்டின் போது சிறுவர்களை பாலியல் ஊழியர்களாக பயன்படுத்துவதை ஒழிப்பது தொடர்பிலான சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அவை அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக அரசு மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சித்திட்டங்களில் சுமார் 200 பேர் கலந்துகொண்டதுடன், சிறுவர்களை பாலியல் ஊழியர்களாக பயன்படுத்துவதைத் தடுப்பதற்குத் தேவையான பொறிமுறை பற்றி பரந்தளவில் கலந்துரையாடப்பட்டது. சுற்றுலாத்துறையின் முன்னேற்றத்தை அடுத்து இந்த நிலைமை உருவாகுவதாகவும், பாலியல் ஊழியர்கள் மத்தியில் உயிர் ஆட்கொல்லி சமூக நோய்கள் ஏற்படுகின்ற அபாயம் நிலவுவதனால் இந்த நிலைமையை ஒழிப்பதற்கு சமுதாயத்தை அறிவுறுத்துவது அவசியமாகும் என்றும், அதற்குப் பொலிஸ் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு விசேட பொறுப்பு அளிக்கப்படுவதாகவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.





இந்த கலந்துரையாடலின் மூலம் தயார் செய்யப்பட்ட அறிக்கையை வரைவு செய்யப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளவும் வழங்கப்பட்டது.





## சர்வதேச சிறுமியர் தினம்

அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி கொண்டாடப்படுகின்ற சர்வதேச சிறுமியர் தினத்தை முன்னிட்டு தேசிய நிகழ்ச்சித்திட்டமொன்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் ஒழுங்கு செய்யப்பட்டதுடன், இது மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தவிசாளரின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளவில் நடாத்தப்பட்டது. இம்முறை இதன் தொணிப்பொருள் 'மகளே உனக்கு சுதந்திரமான உலகம் அவசியமே – பாதுகாப்பான சூழலை பூரணப்படுத்த நாம் உமக்கு கைகொடுக்கின்றோம்' என்பதாகும். இந்த தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் மேல் மாகாண பாடசாலைகளின் பேச்சு, விவாத சங்கங்கள், ஊடக அலகுகள் போன்ற பிரிவுகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்துகொண்டனர். இந்தத் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தில் சுமார் 500 பேர் பங்கேற்றதுடன் சிறுமியரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது. பாடசாலை மாணவர்களின் கலாசார அம்சங்களின் மூலம் மென்மேலும் மெருகூட்டப்பட்ட இந்த தேசிய நிகழ்வில் பங்கேற்ற பாடசாலைகளின் எண்ணிக்கை 22 ஆகும்.









இந்தத் தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை அடுத்து பாலியல் நடவடிக்கைகளுக்கு விருப்பம் தெரிவிக்கக்கூடிய வயது 16 ஆகவும், திருமணம் செய்வதற்கான வயது 18 ஆகவும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பில் திறந்த கலந்துரையாடலொன்று நடாத்தப்பட்டது. இது தொடர்பிலான அறிக்கையொன்றும் தயார் செய்யப்பட்டது. மேற்படி அறிக்கையானது வரைவு செய்யப்பட்டுள்ள தேசிய சிறுவர் பாதுகாப்புக் கொள்கைக்குப் பயன்படுத்திக் கொள்ள வழங்கிவைக்கப்பட்டது.





## தகவல்களை பெற்றுக்கொடுத்தல்

சிறுவர் பாதுகாப்பு, சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர் உரிமைகள் பற்றி பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இதன்போது தேவைக்கு ஏற்றவாறு பதாதைகள், துண்டுப் பிரசுரங்கள், ஸ்டிக்கர்கள், வெளியீடுகள் மற்றும் விவரண சித்திரங்கள் போன்றன வழங்கிவைக்கப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டில் விநியோகிக்கப்பட்டுள்ள வெளியீடுகளின் எண்ணிக்கை 164098 ஆகம்.

<u>**துண்டுப் பிரசுரங்கள்**</u>






## சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை வெகுசன ஊடகங்கள் ஊடாக மக்களுக்கு கொண்டு செல்லல்.

நாட்டில் சிறுவர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது சம்பந்தமான தகவல்களை வெகுசன ஊடக நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்து பொதுமக்களுக்கு அவற்றைக் கொண்டு செல்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதன்போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களின் ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமான செய்தி அறிவித்தல்களை ஊடகங்களுக்கு வெளியிடுதல், விடய ரீதியான ஊடகவியலாளர் மாநாடுகளை நடாத்துதல் போன்றன மேற்கொள்ளப்படுகின்றன.

அவ்வாறே வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வளவாளராக பங்களிப்பும் வழங்கப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் ஊடக அறிக்கைகள் 8 உம், பத்திரிகை அறிவித்தல்கள் 9 உம், விசேட ஊடக மாநாடுகள் 5 உம் நடாத்தப்பட்டதுடன், தொலைக்காட்சி விளம்பரங்களும் ஒளிபரப்பட்டன.





## சிறுவர் பாதுகாப்பு பற்றி சிறுவர்கள் மற்றும் பெரியவர்களை அறிவுறுத்துவதற்கான பாடசாலைகளுக்கு இடையிலான விவாதப் போட்டி

சிறுவர் பாதுகாப்பு பற்றி சமூகத்தில் கலந்துரையாடலொன்றை ஏற்படுத்துகின்ற மற்றும் சிறுவர் பாதுகாப்பு பற்றி சிறுவர்கள் மற்றும் பெரியவர்களை அறிவுறுத்தும் நோக்கத்துடன் 2016 ஆம் ஆண்டில் அகில இலங்கை மட்டத்தில் பாடசாலைகளுக்கு இடையிலான விவாதப் போட்டி நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டம் கல்வி அமைச்சுடன் இணைந்து அமுல்படுத்தப்பட்டது.

மாவட்ட மட்டத்தில் மற்றும் மாகாண மட்டத்தில் ஆரம்ப கட்ட போட்டிகள் நடாத்தப்பட்டதுடன், இவற்றிலிருந்து தெரிவு செய்யப்பட்ட வெற்றிகரமான அணிகள் இறுதிக் கட்டத்திற்கு உள்வாங்கப்பட்டன. இறுதிச்சுற்றின் சகல போட்டிகளும் சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பினூடாக ஔிபரப்புச் செய்யப்பட்டது. வெற்றியீட்டிய குழுக்களுக்கு விருதுகளும், பரிசுகளும் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து வழங்கும் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் சிங்கள மொழி மூலமான 646 போட்டிகள் நடாத்தப்பட்டன. போட்டிக்கு விண்ணப்பித்த பாடசாலைகளின் எண்ணிக்கை 727 ஆகும்.

## சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியின் மாவட்ட போட்டிகள் நடாத்தப்பட்ட முறை

மாவட்ட போட்டிகளை நடாத்தும் பொறுப்பு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட மற்றும் பிரதேச அலுவலர்களுக்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்ததுடன், இதற்கு கல்வி அமைச்சினால் பெயரிடப்பட்ட அலுவலர்களின் உதவியும் கிடைத்தது.





## சிறுவர் பாதுகாப்பு விவாதப் போட்டியின் சிங்கள மொழிமூலமான இறுதி 32 போட்டிகள் மற்றும் தமிழ் மொழி மூலமான இறுதி 32 போட்டிகளை நடாத்தல்

சிங்கள மொழிமூல இறுதி அணிகள் 32 இன் போட்டிகள் கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்றதுடன், தமிழ் மொழிமூல இறுதி அணிகள் 32 இன் போட்டிகள் கொழும்பு தேர்ஸ்ரன் கல்லூரியில் நடாத்தப்பட்டன. இதன்போது சிங்கள மொழி மூலமான 16 அணிகளும், தமிழ் மொழிமூலமான 08 அணிகளும் தொலைக்காட்சி போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டன.





**சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியின் சிங்கள மொழிமூல ஊடக செயலமர்வு**

விவாதப் போட்டியில் கலந்துகொண்ட சிங்கள மொழிமூல அணிகளிலிருந்து இறுதி 32 அணிகளுக்கான விசேட செயலமர்வொன்று 2016.07.09 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. இதன் போது சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதிக்கின்ற தொழில்நுட்ப முறைகள் சம்பந்தமாக சிறுவர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள். இதில் பங்கேற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை 192 ஆகம்.





**சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியின் சிங்கள மொழிமூல ஊடக செயலமர்வு**

விவாதப் போட்டியில் கலந்துகொண்ட சிங்கள மொழிமூல அணிகளிலிருந்து இறுதி 08 அணிகளுக்கான விசேட செயலமர்வொன்று 2016.07.23 ஆம் திகதி இலங்கை மன்றக் கல்லூரியில் நடாத்தப்பட்டது. இதன் போது சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதிக்கின்ற தொழில்நுட்ப முறைகள் சம்பந்தமாக சிறுவர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள். இதில் பங்கேற்ற பிள்ளைகளின் எண்ணிக்கை 48 ஆகம்.





**சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியின் தொலைக்காட்சி ஒளிப்பதிவு மற்றும் ஒளிபரப்பு**

இரண்டாம் சுற்றுக்குத் தெரிவான சிங்கள மொழிமூலமான 32 அணிகளில் 16 அணிகள் மற்றும் தமிழ் மொழிமூல 32 அணிகளில் 08 அணிகள் தொலைக்காட்சி ஒளிப்பதிவில் பங்குபற்றின. சகல போட்டிகளும் ஐரீஎன் அலைவரிசை மூலம் ஒளிப்பதிவு செய்யப்பட்டன. தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒளிபரப்பானது 2016.10.02 ஆம் திகதி முதல் 2017.01.15 ஆம் திகதி வரை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் பி.ப. 5.00 மணி முதல் 6.00 மணி வரை ஒளிபரப்பப்பட்டது

### சிங்கள மொழி மூலம் (சுப்பர் பாடசாலைகள் 16 இன் போட்டிகள்)

| ஒளிபரப்பப்பட்ட திகதி | பிரேரிப்பவர் | எதிர்தரப்பு |
|---|---|---|
| 2016.10.02 | நிக. பமுனுகம மகா வித்தியாலயம் | ஸ்ரீ சுமங்கல வித்தியாலயம் - பாணந்துறை |
| 2016.10.09 | றோயல் கல்லூரி – கொழும்பு | மேமா. பிலி. பரிசுத்த குடும்ப கன்னியஸ்திரி மடம் |
| 2016.10.16 | க.புனித சில்வெஸ்டர் ஆண்கள் கல்லூரி | க. நுகவெல மத்திய மகா வித்தியாலயம் |
| 2016.10.23 | குளி. நாகொல்லாகொட மத்திய மகா வித்தியாலயம் | பொ. தோபாவெவ மகா வித்தியாலயம் |
| 2016.10.30 | கு. மலியதேவ ஆண்கள் கல்லூரி | குளி. குளியாப்பிட்டி மத்திய மகா வித்தியாலயம் |
| 2016.11.06 | ஹ. தெரபுத்த தேசிய பாடசாலை | கம். பண்டாரநாயக்க வித்தியாலயம் |
| 2016.11.13 | சிலா. ஆனந்த தேசிய கல்லூரி | ஆனந்தாக் கல்லூரி, கொழும்பு |
| 2016.11.20 | மா. புனித தோமஸ் கல்லூரி | புனித ஜோசப் வாஸ் கல்லூரி, வெண்ணப்புவ |

### சிங்கள மொழி மூலம் (கால் இறுதி போட்டிகள்)

| ஒளிபரப்பப்பட்ட திகதி | பிரேரிப்பவர் | எதிர்தரப்பு |
|---|---|---|
| 2016.11.27 | றோயல் கல்லூரி – கொழும்பு | ஸ்ரீ சுமங்கல வித்தியாலயம் - பாணந்துறை |
| 2016.12.04 | க.புனித சில்வெஸ்டர் ஆண்கள் கல்லூரி | பொ. தோபாவெவ மகா வித்தியாலயம் |
| 2016.12.11 | கம். பண்டாரநாயக்க வித்தியாலயம் | கு. மலியதேவ ஆண்கள் கல்லூரி |
| 2016.12.18 | மா. புனித தோமஸ் கல்லூரி | சிலா. ஆனந்த தேசிய கல்லூரி |

### சிங்கள மொழி மூலம் (அரை இறுதி போட்டிகள்)

| ஒளிபரப்பப்பட்ட திகதி | பிரேரிப்பவர் | எதிர்தரப்பு |
|---|---|---|
| 2016.12.25 | றோயல் கல்லூரி– கொழும்பு | க.புனித சில்வெஸ்டர் ஆண்கள் கல்லூரி |
| 2017.01.01 | மா. புனித தோமஸ் கல்லூரி | கு. மலியதேவ ஆண்கள் கல்லூரி |

### சிங்கள மொழி மூலம் (இறுதி போட்டி)

| ஒளிபரப்பப்பட்ட திகதி | பிரேரிப்பவர் | எதிர்தரப்பு |
|---|---|---|
| 2017.01.15 | க.புனித சில்வெஸ்டர் ஆண்கள் கல்லூரி | கு. மலியதேவ ஆண்கள் கல்லூரி |

### தமிழ் மொழி மூலம் (இறுதி போட்டி)

| ஒளிபரப்பப்பட்ட திகதி | பிரேரிப்பவர் | எதிர்தரப்பு |
|---|---|---|
| 2017.01.08 | சண்முகா இந்துக கல்லூரி – திருகோணமலை | வின்சன்ட் உயர் கல்லூரி - மட்டக்களப்பு |

### தமிழ் மொழி மூலம்(அரை இறுதி போட்டிகள்)

| ஒளிபரப்பப்பட்ட திகதி | பிரேரிப்பவர் | எதிர்தரப்பு |
|---|---|---|
| 2016.12.25 | றோயல் கல்லூரி – கொழும்பு | சண்முகா இந்துக் கல்லூரி – திருகோணமலை |
| 2017.01.01 | புத்தளம் சனாதிபதி வித்தியாலயம் | வின்சன்ட் உயர் கல்லூரி – மட்டக்களப்பு |

தமிழ் மொழி மூலம் (கால் இறுதி போட்டிகள்)

| ஒளிபரப்பப்பட்ட திகதி | பிரேரிப்பவர் | எதிர்தரப்பு |
|---|---|---|
| 2016.11.27 | சண்முகா இந்துக்கல்லூரி – திருகோணமலை | வேம்படி மகளிர் கல்லூரி – யாழ்ப்பாணம் |
| 2016.12.04 | றோயல் கல்லூரி – கொழும்பு | கெகுனுகொல்ல மகா வித்தியாலயம் |
| 2016.12.11 | இ.சி.சி.தமிழ் மகா வித்தியாலயம், பலாங்கொடை | புத்தளம் சனாதிபதி வித்தியாலயம் |
| 2016.12.18 | இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் | வின்சன்ட் உயர் கல்லூரி – மட்டக்களப்பு |

## பாடசாலைகளுக்கு இடையிலான விவாதப் போட்டியின் விசேட சந்தர்ப்பங்கள்










## சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியின் இறுதிப் போட்டி

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான விவாதப் போட்டியின் அகில இலங்கை இறுதிப் போட்டி 2016.11.04 ஆம் திகதி வைபவ ரீதியாக ஐரீஎன் ஊடக வலையமைப்பில் நடைபெற்றது. சிங்கள மொழிமூல இறுதிப் போட்டியில் கண்டி சில்வஸ்தர் வித்தியாலயம் மற்றும் குருநாகல் மலியதேவ வித்தியாலயம் ஆகியன போட்டியிட்டன. இதன்போது கண்டி சில்வஸ்தர் வித்தியாலயம் வெற்றியீட்டியதுடன், குருநாகல் மலியதேவ வித்தியாலயம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. தமிழ் மொழிமூல இறுதிப் போட்டியில் மட்டக்களப்பு வின்சன்ட் உயர் கல்லூரி மற்றும் திருகோணமலை சண்முகா வித்தியாலயம் ஆகியன போட்டியிட்டன. இதன் போது மட்டக்களப்பு வின்சன்ட் உயர் கல்லூரி வெற்றியீட்டியதுடன், திருகோணமலை சண்முகா வித்தியாலயம் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. வெற்றிபெற்றவர்களுக்கு விருதுகள், பரிசுகள், பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கி வைக்கும் நிகழ்வு மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர் கௌரவ சந்திராணி பண்டார அவர்களின் தலைமையில் நடைபெற்றது.











### சிறுவர் பாதுகாப்பு பற்றிய விவாதப் போட்டியில் வெற்றியீட்டியர்களுக்கான பரிசுகளும், சான்றிதழ்களும்

- அகில இலங்கை போட்டிகளில் வெற்றியீட்டியர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள், பதக்கம் மற்றும் விருதுகளும் வழங்கிவைக்கப்பட்டன. பரிசுகளுக்கான அனுசரணை இலங்கை வங்கியினால் பெற்றுக் கொடுக்கப்பட்டது. அதன் பெறுமதி ரூபா ஒரு மில்லியன் ஆகும்.
- மாவட்ட மட்டத்தில் வெற்றியீட்டியவர்கள் மற்றும் போட்டியில் கலந்துகொண்ட ஏனைய பாடசாலைகளுக்கு பங்குபற்றியமைக்கான சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.
- சகல சான்றிதழ்களும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து வழங்கின.

### சிறுவர் பாதுகாப்பு பற்றிய குறுந்திரைப்படப் போட்டி




சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தந்தையின் வகிபாகம் என்ன என்பதை அடிப்படையாகக் கொண்டு இந்த குறுந் திரைப்படப் போட்டி நடாத்தப்பட்டது. இது பாடசாலை பிரிவு மற்றும் திறந்த பிரிவு என்ற வகையில் இரு பிரிவுகளின் கீழ் நடாத்தப்பட்டதுடன், குறுந் திரைப்பட போட்டி தகுதிவாய்ந்த நடுவர் குழுவினால் வெற்றியீட்டியவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். வெற்றிபெற்ற குறுந் திரைப்படங்களை தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்புச் செய்வதற்கும், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் மேற்கொள்ளும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களின் போதும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. வெற்றியீட்டியவர்களுக்கு பதக்கங்கள், பரிசுகள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கிவைக்கப்பட்டன.






## சிறுவர் பாதுகாப்பு விடயம் தொடர்பில் பாடசாலை ஊடக அலகுகளை ஒருங்கிணைப்புச் செய்யும் நிகழ்ச்சித்திட்டம்




துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களைப் பாதுகாத்துக் கொள்வது பற்றிய தகவல்களை பாடசாலை ஊடக அலகுகளின் மூலம் பாடசாலைகளில் பிரபல்யப்படுத்துவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. பாடசாலைகளில் நாளாந்தம் செயற்பட்டு வருகின்ற அலகொன்றாக உள்ள பாடசாலை ஊடக அலகு மூலம் பிரச்சாரம் செய்யப்படுகின்ற செய்திகள், களியாட்ட நிகழ்ச்சிகள் மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளில் சிறுவர் பாதுகாப்பு பற்றிய செய்திகளை உள்ளடக்குவதன் மூலம் இந்த செய்திகளை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் ஆகிய இரு தரப்பினருக்கும் நல்ல முறையில் தொடர்பாடல் செய்வது இதன்போது பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தல் மற்றும் அமுல்படுத்துவது பற்றி மாணவர்களுக்கு குறித்த விடயம் பற்றிய பயிற்சி பெற்றுக் கொடுக்கப்படுகின்றது. இது தொடர்பான வழிகாட்டல் தொகுப்பு களனி பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்புடன் தயார் செய்யப்பட்டுள்ளது. இது கல்வி அமைச்சுடன் இணைந்து அமுல்படுத்தப்படுகின்றதொரு நிகழ்ச்சித்திட்டமாகும்.

## கண்காட்சிகள் மற்றும் நடமாடும் சேவைகளை நடாத்துதல்

இலங்கையில் பல்வேறு நிறுவனங்களினால் கல்விசார் கண்காட்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுவதுடன், கிடைக்கின்ற கோரிக்கைகளின் அடிப்படையில் மேற்படி கண்காட்சிகளில் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக அறிவுறுத்தும் கல்விக் கண்காட்சிக் கூடங்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை ஒழுங்கு செய்கின்றது. இதன்போது சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்களை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பதாதைகளை விநியோகிக்கப்படுவதுடன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உருவாக்குகின்ற வீடியோ காட்சிகளும் இங்கு காட்சிப்படுத்தப்படுகின்றன.










"ஒரு பத்திரிகையை விடவும் கூடுதலான விடயங்கள்" என்ற தொனிப்பொருளின் கீழ் தயார் செய்யப்பட்டுள்ள லபெந்தி எனும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ செய்தி வெளியீடு 2016 ஆம் ஆண்டுக்காக அக்டோபர் மாதத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. சிறுவர் பாதுகாப்பு பற்றி ஆசிரியர்களையும், பெற்றோரையும், சிறுவர்களையும் மற்றும் சமுதாயத்தினரையும் அறிவுறுத்துவதற்காக சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் இந்த செய்திச் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருகின்றது. சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் ஒட்டுமொத்த சமுதாயத்தையும் அறிவுறுத்துவது இதன் முக்கிய நோக்கமாகும்.

## ஊடக பிரச்சார விளம்பரங்கள்

சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பின்வருமாறு 3 பிரச்சார விளம்பரங்கள் 2016 ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்டன. இவற்றின் உள்ளக்க தொணிப்பொருள்கள் பின்வருமாறாகும்



1. சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் குடும்பங்களில் தந்தைமாரின் வகிபாகம்
2. சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பெற்றோரின் கவனத்தைக் கோரல்
3. சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் சிறுவர்கள் தாமே கவனம் செலுத்தல்
4. 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவையை பிரபல்யப்படுத்தல்.

இந்த விளம்பரங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலம் ஊடகங்களில் பிரச்சாரம் செய்யப்பட்டன. இது தெரன ஊடக வலையமைப்பு,MBC ஊடக நிறுவனம், இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் மற்றும் MTV ஊடக நிறுவனங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட வானொலி அலைவரிசைகள் ஊடாக ஒளிபரப்பு மற்றும் ஒலிபரப்புச் செய்யப்பட்டன. இதற்கு பொது மக்களின் உயர் மட்ட வரவேற்புக் கிடைத்ததுடன், இந்த விளம்பரங்கள் பொதுவாக ரசிகர்கள் கூடுதலானோர் தொலைக்காட்சியை பார்வையிடுகின்ற நேரங்களில் ஒளிபரப்புச் செய்யப்பட்டன. இதன் மூலம் குறித்த செய்தியை கூடுதலானோருக்குக் கொண்டு செல்வதற்கு மற்றும் சமூகத்தில் அது பற்றிய பரந்தளவிலான கலந்துரையாடலை உருவாக்க முடிந்துள்ளது. அத்துடன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ பேஸ்புக் கணக்கு மற்றும் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலமும் இந்த விளம்பர அறிவித்தல்களை பிரச்சாரம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.





## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நூலகத்தை அபிவிருத்தி செய்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நூல்நிலையத்திற்கு நூலகர் ஒருவர் 2016 ஆம் ஆண்ட ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளார். தற்போது இந்த நூல்நிலையத்தை சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்களை உள்ளடக்கிய விசேட நூலகமாக இதனை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சிறுவர் பாதுகாப்பு விடயம் பற்றிய ஆராய்ச்சிகள், உள்நாட்டு வெளிநாட்டு புத்தகங்கள் மற்றும் வேறு பல வெளியீடுகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதிகாரசபையினுள் கடமையாற்றுகின்ற அலுவலர்கள் மற்றும் வெளியிலிருந்து வருகைதருகின்ற ஆட்களுக்கும் இதனைப் பயன்படுத்த வாய்ப்பளிக்கப்படுகின்றது.

## சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் வடிவமைக்கப்படுகின்ற புதிய இணையத்தளம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு மேலதிகமாக சிறுவர் பாதுகாப்பு தொடர்பிலான தகவல்களை உள்ளக்கிய புதிய இணையத்தளமொன்றை 2016 ஆம் ஆண்டில் வடிவமைப்பதற்கான ஆரம்ப பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. சிறுவர் துஷ்பிரயோகங்களிலிருந்து சிறுவர்களை பாதுகாத்து, அவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உரித்தாக்கிக் கொடுப்பதற்கான தகவல்களை இப்புதிய இணையத்தளத்தில் சிறுவர்களுக்கு நட்புறவான வகையில் உள்ளடக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. ஆசிரியர்கள்,பெரியவர்கள் மற்றும் சிறுவர்களும் இலகுவாக பயன்படுத்துவதற்கு மற்றும் புரிந்துகொள்ளக்கூடியவாறு இந்த இணையத்தளம் பேணிவரப்படுவதுடன், சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் தயார் செய்யப்படுகின்ற வீடியோ தயாரிப்புக்கள் மற்றும் நிகழ்ச்சிகளும் இதில் தரவேற்றம் செய்யப்படுகின்றது.




## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.childprotection.gov.lk ஐ பயன்படுத்துவோரின் வசதி கருத்தி சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் மொழிபெயர்ப்புச் செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படுகின்ற இந்த இணையத்தளத்தின் மூலம் சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்கள், உத்தியோகபூர்வ அறிவித்தல்கள், சிறுவர் பாதுகாப்பு பற்றிய ஆக்கங்கள், வெளியீடுகள், ஆலோசனைச் சேவைகள் பற்றி இலகுவாக அறிந்துகொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது.




## சிறுவர் பாதுகாப்பு பற்றிய துண்டுப் பிரசுரங்கள் மற்றும் பதாதைகள் உட்பட அச்சு விடயங்களை வடிவமைத்தல்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் பாதுகாப்பு பற்றிய தகவல்களை உள்ளடக்கிய துண்டுப் பிரசுரங்கள், பதாதைகள் உட்பட அச்சிடப்பட்ட அம்சங்களின் மூலம் சிறுவர் பாதுகாப்பு சம்பந்தமாக சிறுவர்கள், ஆசிரியர்கள் உட்பட ஒட்டுமொத்த சமுதாயத்தினரும் அறிவுறுத்தப்பட்டனர். இதன்போது சிறுவர்கள் தமது பாதுகாப்பிற்காக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய முறை பற்றி இலகுவாக வாசித்துப் புரிந்துகொள்ளக்கூடியவாறு மற்றும் பெற்றோர், பெரியவர்கள் ஆகியோர் சிறுவர்களை பாதுகாத்துக் கொள்வதற்காக கவனம் செலுத்த வேண்டிய முறை பற்றி முக்கியமாக உள்ளடக்கப்பட்டிருந்தது. இவ்வனைத்து ஆக்கங்களின் மூலமும் 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை பற்றியும் அறிவுறுத்த முடிந்தது.







## 1929 இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 14 (ஒ) பிரிவுக்கு அமைய சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் முறைப்பாடுகளை உரிய அதிகாரிகளிடம் சமர்ப்பிப்பதை மென்மேலும் விளைதிறன்மிக்கதாகவும், வினைத்திறன்மிக்கதாகவும் மாற்றியமைப்பதற்காக 1929 இலங்கைச் சிறுவர் உதவித் தொலைபேசி சேவை 2010 ஜூலை 22ஆந் திகதி தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கட்டிடத்தொகுதியில் தாபிக்கப்பட்டது. இது சிறுவர் துஷ்பிரயோகங்களின் முறைப்பாடுகளை பொறுப்பேற்றல் மற்றும் அவற்றுக்கு துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கான முன்னோடி பொறிமுறையாக உள்ளது. சமூகத்தில் மறைந்து காணப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களை அறிக்கையிடுகின்ற போக்கு இதன்மூலம் அதிகரித்துள்ளது.

கட்டணம் அறவிடாது இயங்கி வருகின்ற இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசி சேவைக்கு அழைப்பு விடுப்பதன் மூலம் எவரும் சிறுவர்கள் பற்றி எழுகின்ற சிக்கல்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான முறைப்பாடுகளை செய்வதற்கும், ஆலோசனை சேவைகளை பெற்றுக்கொள்வதற்கும் ஆற்றல் உள்ளது.

இதன் மூலம் ஆலோசனை சேவைகளையும் பெற்றுக் கொள்ள முடியும். இந்த சேவை பிரதானமாக சிறுவர்களுக்கு ஒதுக்கப்பட்டதாக உள்ள போதிலும், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் சிறுவர்களுக்கு பாதுகாப்பை வழங்குகின்ற பெரியவர்களுக்கு, சிறுவர்கள் தொடர்பாக அவர்களுக்கு உள்ள சிக்கல்கள் மற்றும் சிறுவர்களை வளர்ப்பதில் உள்ள நடைமுறைகள் போன்றன பற்றி கலந்துரையாடுவதற்கும் இந்த சேவையை பயன்படுத்த முடியும். 2016ஆம் ஆண்டில் 177,338 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதுடன் இவற்றில் 8,810 முறைப்பாடுகள் ஆரம்ப முறைப்பாடுகள் என இனங்காணப்பட்டுள்ளன. அடுத்தகட்ட விசாரணைகளின் போது இந்த முறைப்பாடுகளில் குறிப்பிடத்தக்களவானவை உண்மைக்கு மாறான தன்மை மற்றும் சாட்சிகள் இல்லாமையினால் நீங்குகின்றன.



சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள்

| மாவட்டம் | கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை |
|---|---|
| அம்பாறை | 183 |
| அநுராதபுரம் | 521 |
| பதுளை | 271 |
| மட்டக்களப்பு | 148 |
| கொழும்பு | 1271 |
| காலி | 635 |
| கம்பஹா | 917 |
| ஹம்பாந்தோட்டை | 412 |
| யாழ்ப்பாணம் | 169 |
| களுத்துறை | 558 |
| கண்டி | 407 |
| கேகாலை | 351 |
| கிளிநொச்சி | 116 |
| குருநாகல் | 722 |
| மன்னார் | 68 |
| மாத்தளை | 192 |
| மாத்தறை | 307 |

| | |
|---|---|
| மொனராகலை | 252 |
| முல்லைத்தீவு | 119 |
| நுவரெலியா | 211 |
| பொலன்னறுவை | 221 |
| புத்தளம் | 463 |
| இரத்தினபுரி | 593 |
| திருகோணமலை | 139 |
| வவுனியா | 115 |
| **மொத்தம்** | **9361** |

சிறுவர் துஷ்பிரயோகங்கள் பற்றிய முறைப்பாடுகள் தேசிய சிறுவர் அதிகாரசபைக்கு கிடைக்கும் பல்வேறு முறைகள் காணப்படுகின்றன. 1929 எனும் இலங்கை சிறுவர் தொலைபேசி சேவை ஊடாக பெருமளவு முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படுவதுடன், அதிகாரசபைக்கு வருகைதந்து முறைப்பாடுகளைச் சமர்ப்பிப்பதன் மூலமும், கடிதம் மூலமும், பெக்ஸ் மூலமும், மின்னஞ்சல் மூலமும் தேசிய சிறுவர் அதிகாரசபைக்கு முறைப்பாடுகள் கிடைக்கின்றன. இவ்வாறு கிடைக்கின்ற அனைத்து முறைப்பாடுகளும் துரிதமாக விசாரிக்கப்படுவதுடன் முறைப்பாட்டின் தன்மைக்கமைய அவை வகைப்படுத்தப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டு இவ்வனைத்து வழிமுறைகளின் மூலமும் 9,361 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

## சட்டரீதியான பணிகள்

துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களை பாதுகாத்தல், அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சிறுவர் துஷ்பிரயோகங்களை ஒழிப்பதற்கான சட்டரீதியான, நிர்வாக அல்லது வேறு திருத்தங்களை சிபாரிசு செய்தல், சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான சட்டங்களை அமுல்படுத்த ஆலோசனை வழங்குதல் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் சம்பந்தமான சகல புலனாய்வுகள் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை ஒழுங்குபடுத்தல் அது சம்பந்தமாக நீதிமன்றங்களில் ஆஜராதல் போன்ற பணிகள் சட்டப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன. இதன்போது அதிகாரசபையின் சட்டத்திற்கு மேலதிகமாக, பின்வரும் சட்டங்களுக்கு ஏற்புடையவாறும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2005 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டம்
- 2005 ஆம் ஆண்டின் 34ஆம் இலக்க குடும்ப வன்முறைகளை தடுப்பதற்கான சட்டம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் இயங்கிவருகின்ற சட்டப்பிரிவினால் 2016 ஆம் ஆண்டில் சட்ட ஆலோசனை வழங்குவதன் கீழ் தொலைபேசி மூலம் 1710 மற்றும் சேவைபெறுநர்கள் அதிகாரசபைக்கு வருகைதந்து 169 முறைப்பாடுகளை வழங்கியுள்ளனர். மேலும் இந்த அலகின் அலுவலர்கள் 114 தடவைகள் வழக்குகளில் ஆஜராகியுள்ளனர். 125 கூட்டங்களிலும் இந்த அலகின் அலுவலர்கள் பங்கேற்றுள்ளனர்.

2016 ஆம் ஆண்டு சட்டப் பிரிவின் பங்களிப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (2005 இன் 16 ஆம் இலக்க சுனாமி விசேட ஏற்பாடுகள் சட்டத்துக்கு அமைய)

| நீதிமன்றம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| பத்தரமுல்லை சிறுவர் நீதிமன்றம் | 07 |
| காலி நீதவான் நீதிமன்றம் | 17 |
| கல்முனை நீதவான் நீதிமன்றம் | 21 |
| பலபிட்டி நீதவான் நீதிமன்றம் | 02 |
| மாத்தறை நீதவான் நீதிமன்றம் | 18 |
| களுத்துறை நீதவான் நீதிமன்றம் | 07 |
| பத்தேகம நீதவான் நீதிமன்றம் | 01 |
| கங்கொடவில நீதவான் நீதிமன்றம் | 01 |
| அம்பாறை | 17 |
| ***மொத்தம்*** | **91** |

## 2016 ஆம் ஆண்டு சட்டப் பிரிவின் பங்களிப்பு வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்களுக்கு)

| நீதிமன்றம் | வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|
| பத்தரமுல்லை சிறுவர் நீதிமன்றம் | 02 |
| தெஹிஅத்தகண்டிய நீதவான் நீதிமன்றம் | 03 |
| கங்கொடவில நீதவான் நீதிமன்றம் | 06 |
| குளியாப்பிட்டி நீதவான் நீதிமன்றம் | 01 |
| மனித உரிமைகள் ஆணைக்குழு | 01 |
| மொத்தம் | **13** |

## சிறுவர் துஷ்பிரயோகத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் சாட்சிகளை வீடியோ ஒளிப்பதிவு செய்தல்

சிறுவர் துஷ்பிரயோகங்கள் காரணமாக பாதிக்கப்படுகின்ற சிறுவர்களின் சாட்சிகளை வீடியோகாட்சிகளாக ஒளிப்பதிவு செய்வதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் விசேட அலகொன்று இயங்கிவருகின்றது. 1999ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சாட்சிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைய துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியிருக்கின்ற ஒரு சிறுவனின் சாட்சியை வீடியோ ஒளிப்பதிவு செய்து அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு இதன்மூலம் இடமளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இவ்வாறான 167 சாட்சிகள் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் கோரிக்கை விடுக்கப்பட்ட நீதிமன்றங்களுக்கு வீடியோ சாட்சிகளின் 88 பிரதிகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

## இணையத்தள கண்காணிப்பு அலகை இயங்கச் செய்தல்

சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் பணிக்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் மற்றும் ஊடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற ஆபாச வெளியீடுகளைத் தடுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதை கண்காணிப்புச் செய்தல் மற்றும் கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகள் இந்தப் பிரிவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

கிடைக்கின்ற முறைப்பாடுகளை துரிதமாக விசாரணை செய்தல், அவ்வாறான நிலைமைகள் இணையத்தளத்தில் காணப்படுகின்றதா என்பதை தேடிப்பார்த்தல், சிறுவர்கள் இணையத்தளத்தை சரியாக பயன்படுத்துவது எவ்வாறு பற்றி விழிப்புணர்வூட்டல், இணையத்தளத்தை தவறாகப் பயன்படுத்தாது சிறுவர்களின் அபிவிருத்திக்காக எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி பெற்றோர், அலுவலர்கள் மற்றும் சமுதாயத்தை அறிவுறுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், இணையத்தளத்தை இலங்கையில் விஸ்தரித்தல் மற்றும் இணையத்தளத்தைப் பயன்படுத்தி நடவடிக்கை மேற்கொள்கின்ற அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் தேவையான தலையீடுகளைச் செய்தல், சிறுவர்கள், அலுவலர்கள் மற்றும் சமுதாயத்தை விழிப்புணர்வூட்டத் தேவையான துண்டுப் பிரசுரங்கள், பதாதைகளை தயார் செய்வது இதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் 41 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு பயனாளிகள் 7710 பேர் விழிப்புணர்வூட்டப்பட்டனர்.

## 2016 ஆம் ஆண்டின் இணையத்தள பாதுகாப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டம்





| நிகழ்ச்சித்திட்டம் | நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| சிறுவர்களை விழிப்புணர்வூட்டல் | 23 | 3845 |
| பெற்றோர் மற்றும் சமுதாயத்தை விழிப்புணர்வூட்டல் | 11 | 3115 |
| அலுவலர்களை விழிப்புணர்வூட்டல் | 07 | 750 |
| **மொத்தம்** | 41 | 7710 |

## பொலிஸ் விசேட விசாரணைகள்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 1929 இலங்கை சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவை ஊடாக மற்றும் வேறு முறைகளின் மூலம் பொது மக்களிடமிருந்து கிடைக்கின்ற சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய முறைப்பாடுகளை துரிதமாக விசாரணை செய்து சட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் பொலிஸ் விசாரணை அலகு நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதற்காக 24 மணி நேரமும் இயங்கிவருகின்ற அலுவலர்கள் 34 பேரைக் கொண்ட குழு சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் இந்த அலகுக்கு 205 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

## 2016 ஆம் ஆண்டு விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு நேரடியாகக் கிடைத்த முறைப்பாடுகள்

| முறைப்பாட்டின் தன்மை | முறைப்பாடுகளின் எண்ணிக்கை | விசாரணையின் தற்போதைய நிலைமை (ஆரம்ப பொலிஸ்விசாரணை) | நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்ற எண்ணிக்கை | நீதிமன்றத்தில் விசாரணை முடிந்துள்ளவை |
|---|---|---|---|---|
| சிறிய குற்றச் செயல்கள் | 42 | பூர்த்தி | 42 | 42 |
| நானாவித முறைப்பாடுகள் | 140 | பூர்த்தி | 16 | 03 |
| சிறுவர் குற்றச்செயல்கள் | 23 | 21 | 22 | - |
| மொத்தம் | **205** | **21** | **80** | **45** |

## இணையத்தளம் மற்றும் வேறு கையடக்கத் தொலைபேசிகளை முறைகேடாகப் பயன்படுத்துவதன் மூலம் சிறுவர்கள் பாலியல் ரீதியாக மற்றும் வேறு விதமாக துன்புறுத்தப்படுவது பற்றிய முறைப்பாடுகளைச் செய்யவென 0773220032 மற்றும் 0713220046 எனும் பிரத்தியோகமான இரண்டு தொலைபேசி இலக்கங்கள்

இணையத்தளம் மற்றும் வேறு கையடக்கத் தொலைபேசிகளை முறைகேடாகப் பயன்படுத்துவதன் மூலம் சிறுவர்களுக்கு பாலியல் ரீதியாக மற்றும் வேறு விதமாக துன்புறுத்தல் மற்றும் தொந்தரவுசெய்வதற்கு எதிராக நடவடிக்கை மேற்கொண்டு அதனைத் தடுப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் தற்போது பல்வேறு கோணங்களில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.




இது தொடர்பில் மேற்கொண்டுள்ள புதிய நடவடிக்கையாக இருப்பது இணையத்தளம் ஊடாக அல்லது கையடக்கத் தொலைபேசி ஊடாக தொந்தரவுக்கு ஆளாகின்றவர்களின் தகவல்களை 1929 ஊடாக அல்லது அதிகாரசபையின் பிரதான தொலைபேசி மூலமாக அல்லது தபால் மூலம் அல்லது பெக்ஸ் செய்தி மூலம் கிடைக்கின்ற முறைப்பாடுகள் அதிஉயர் தொழில்நுட்ப மென்பொருட்கள் மூலம் மற்றும் சம்பந்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி சேவை வழங்குநர்களுடன் இரகசியத்தன்மையை பாதுகாக்கும் வகையில் மேற்கொள்ளும் விசாரணைகளின் மூலம் சேவை பெறுநர்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதாகும். இதற்கான முன்னோடிக் கருத்திட்டமொன்றாக முறைப்பாடுகளை செய்யவென 0773220032 மற்றும் 0713220046ஆகிய இரண்டு தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன

## உளவியல், சமூக நிகழ்ச்சித்திட்டம்

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையில் இயங்கி வருகின்ற உளவியல், சமூகப் பிரிவினால் சிறுவர்களின் உளவியல் நல்லநிலைத்திருத்தல் மற்றும் உச்ச நலனுக்கான உளவியல் ஆலோசனைச் சேவை மற்றும் உளவியல் சிகிச்சை சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல், வீடியோ சாட்சிகளை ஒளிப்பதிவு செய்வதற்கு வருகைதருகின்ற பிள்ளைகளில் அமைதியான மனநிலையை கட்டியெழுப்பி முன்ஆயத்தப்படுத்தல், சம்பவ கருத்தரங்கிற்குப் பங்களிப்பு வழங்குவது, உளவியல் உதவிகள் மற்றும் உளவியல் மதிப்பீடுகளைச் செய்தல், சிறுவர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமுதாயத்தை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலம் சிறுவர்களின் உச்சளவான

நலன் மற்றும் பாதுகாப்புக்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.

1929 சிறுவர் உதவித் தொலைபேசிச் சேவைக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகள் மற்றும் நேரடியாக பிரிவுக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகள் தொடர்பிலான ஆலோசனை மற்றும் தேவையான உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக மாவட்ட உளவியல் சமூக அலுவலர்கள், மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களிடம் சமர்ப்பிப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் சிறுவர்களுக்கு மத்தியில் ஆளுமை விருத்தி,ஆக்கபூர்வமானதன்மையை கட்டியெழுப்பல், சாதகமான மனப்பாங்கை ஏற்படுத்துவதற்கான உளவியல் மற்றும் சமூக செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டில் உளவியல் ஆலோசனை சேவைகள் 203 வழங்கப்பட்டுள்ளன. வீடியோ சாட்சிகளை பதிவுசெய்வதற்காக சிறுவர்களை முன் ஆயத்தப்படுத்துவது 168 மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் 15 மேற்கொள்ளப்பட்டுள்ளன. உளவியல் சமூக உதவிகள் 746 வழங்கப்பட்டுள்ளன. உளவியல் சமூக பிரிவுக்கு 1929 சிறுவர் தொலைபேசி சேவை ஊடாக கிடைத்துள்ள நேரடி முறைப்பாடுகளின் எண்ணிக்கை 118 ஆகும். கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு உட்பட பல்வேறு அமைச்சுக்கள் தொடர்பிலான தேசிய குழுக்கள் மற்றும் ஏனைய கூட்டங்களுக்கான பங்கேட்பு மற்றும் ஆக்கபூர்வமான பங்களிப்புகளைச் செய்துள்ளமை 238 ஆகும். உளவியல் சமூகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பின்னாய்வுகளின் எண்ணிக்கை 712 ஆகும். உளவியல் சமூகத் தலையீடுகள் வழங்கி முடிக்கப்பட்டு சட்டத்தை அமுல்படுத்தும் பிரிவிடம் பொறுப்பளிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 402 ஆகும்.

## திடீர் அனர்த்த நிலைமைகளின் போது சிறுவர்களுக்கு சமூக உளவியல் உதவிகளைப் பெற்றுக்கொடுத்தல்

இந்த ஆண்டில் வெள்ளம் காரணமாக திடீர் அனர்த்த நிலைக்கு ஆளான சிறுவர்களுக்கு உளவியல் சமூக உதவிகளைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான பொதுவான திட்டமொன்று தயார் செய்யப்பட்டது. அத்துடன் மேற்படி திட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அலுவலர்களை விழிப்புணர்வூட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## சிறுவர்களை மையமாகக் கொண்ட நிலையங்கள்

சிறுவர்களின் பாதுகாப்பிற்காக செயற்பட்டு வருகின்ற அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களை ஒருங்கணைப்புச் செய்தல் மற்றும் சிறுவர் ஆலோசனைச் சேவைகளை அமுல்படுத்துவதே இந்த சிறுவர் மைய நிலையங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. 2009ஆம் ஆண்டில் முதலாவது சிறுவர் மைய நிலையம் வவுனியா மாவட்ட செயலக கட்டிடத்தொகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் மாவட்ட செயலகங்களில் சிறுவர் மைய நிலையங்களைத் தாபிக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, ஹம்பாந்தோட்டை, மன்னார் மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் சிறுவர் மைய நிலையங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. களுத்துறை சிறுவர் மைய நிலையம் 2016 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது.

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
## 2016.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான வருமான செலவினக்கூற்று

(ரூபா)

| விபரம் | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| | | | |
| மீண்டுவரும் கொடை–திறைசேரி | | 240,703,967.00 | 235,370,000.00 |
| -ஏனைய நிறுவனங்கள | 1 A | 1,094,000.00 | 10,785,633.18 |
| ஏனைய வருமானங்கள் | 1 B | 271,179.72 | 1,404,514.46 |
| தேசிய செயற்றிட்டத்திற்கு திறைசேரியின் கொடை | | 155,812,159.96 | 47,000,000.00 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்திற்கான கொடை | 1 C | 214,000.00 | 578,958.69 |
| *மொத்த வருமானம* | | **398,095,306.68** | **295,139,106.33** |
| *செலவினம்* | | | |
| நிருவாக செலவினம் | 2 | 208,768,284.47 | 215,628,638.10 |
| ஏனைய செயற்பாட்டுச் செலவினம் | 3 | 156,606,259.76 | 56,510,468.86 |
| கருத்திட்டச் செலவினம | 4 | 2,564,263.33 | 13,316,523.93 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் செலவினம் | 5 | 424,848.10 | 10,666,550.00 |
| நிதிச் செலவினம் | 6 | 30,340.29 | 28,910.50 |
| *மொத்த செலவினம்* | | **368,393,995.95** | **296,151,091.39** |
| *தேறிய மிகை/(குறை)* | 7 | **29,701,310.73** | **(1,011,985.06)** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
## 2016.12.31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று

(ரூபா)

| விபரம் | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| *நடைமுறையல்லாச் சொத்துக்கள்* | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 8 | 103,863,315.64 | 94,509,420.04 |
| குத்தகைக் காணி | | 23,265,988.71 | - |
| முதலீடும், சேமிப்பும் | 9 | 9,734,766.20 | 14,204,700.25 |
| நீண்டகால கிடைக்க வேண்டிய சொத்துக்கள | 10 | 100,226.70 | 132,136.00 |
| | | **136,964,297.25** | **108,846,256.29** |
| *நடைமுறைச் சொத்துக்கள்* | | | |
| பொருட்களின் இருப்பு - எழுதுகருவி | | 439,315.09 | 613,759.21 |
| இடர் கடன் | | 470,734.14 | 470,734.14 |
| கிடைக்க வேண்டிய கணக்குகள் | 11 | 44,339,323.96 | 41,122,861.18 |
| முற்பணக் கொடுப்பனவு | 12 | 2,588,313.31 | 510,399.98 |
| காசும், காசுக்கு சமமானவையும் | 13 | 42,046,055.76 | 23,697,526.73 |
| | | **89,883,742.26** | **66,415,281.24** |
| மொத்த சொத்துக்கள் | | **226,848,039.51** | **175,261,537.53** |
| பொறுப்புக்கள் | | | |
| நடைமுறையல்லாப் பொறுப்புக்கள் | | | |
| ஓய்வூதியப் பணிக்கொடை | | 7,506,274.00 | 6,002,385.96 |
| வரையறுக்கப்பட்ட நிதி | 14 | 465,404.00 | 465,404.00 |
| கருத்திட்ட மிகை அல்லது குறை | 15-A | 5,924,566.82 | 14,647,830.15 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் | 15-B | (10,770,674.73) | (10,559,826.63) |
| | | **3,125,570.09** | **10,555,793.48** |
| *நடைமுறைப் பொறுப்புக்கள்* | | | |
| நின்ற கணக்குகள் | 16 | 39,026,448.57 | 21,762,942.20 |
| குறுங்கால ஏற்பாடுகள் | 17 | 944,850.14 | 1,137,611.14 |
| | | **39,971,298.71** | **22,900,553.34** |
| மொத்த பொறுப்புக்கள் | | **43,096,868.80** | **33,456,346.82** |
| தேறிய சொத்துக்கள் | | **183,751,170.72** | **141,805,190.71** |
| நிதியீட்டல் | | | |
| மூலதனக் கொடைகள் | 18 | 161,106,534.39 | 150,542,976.54 |
| மூலதன ஒதுக்கம் | | 2,153,119.00 | 2,153,119.00 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | 13,000,000.00 | 13,000,000.00 |
| தடுத்துவைக்கப்பட்ட உழைப்புக்கள் | | 7,491,517.33 | (23,890,904.83) |
| | | **183,751,170.72** | **141,805,190.71** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
## 2016.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசோட்டக்கூற்று

(ரூபா)

| விபரம் | குறிப்பு | 2016 | 2015 |
|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம் | | | |
| பொதுவான செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மிகை/(குறை) | | 29,701,310.73 | (1,011,985.06) |
| காசல்லாத மாற்றங்கள் | | | |
| தேய்மானம் | | 15,758,474.58 | 10,141,621.62 |
| குத்தகை கடன் தேய்மானம் | | 3,474,228.26 | - |
| தேய்வடைந்த சுனாமி நிதி உதவி | | (7,253,000.00) | - |
| செலுத்த வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | 17,263,506.37 | 5,585,663.71 |
| குறுங்கால ஒதுக்கங்களின் அதிகரிப்பு | | (192,761.00) | 87,642.00 |
| இருப்பு அதிகரிப்பு | | 174,444.12 | (282,038.71) |
| கிடைக்க வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | (3,216,462.78) | (3,700,587.27) |
| முன்செலுத்தல்களின் அதிகரிப்பு | | (2,077,913.33) | 5,518.94 |
| தடுத்துவைத்த உழைப்புக்களின் அதிகரிப்பு/ குறைவு | | | (6,048,434.99) |
| பணிக்கொடைப் பங்களிப்பு | | -1,577,313.04 | 3,616,239.21 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசோட்டம் | | **55,209,139.99** | **8,393,639.45** |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம் | | | |
| நிலையான சொத்துக் கொள்வனவு | | (33,534,830.07) | (10,297,005.48) |
| குத்தகை காணிக் கொள்வனவு | | (18,317,757.08) | - |
| நீண்டகால கிடைக்க வேண்டிய கணக்குகளின் அதிகரிப்பு | | 31,909.30 | (37,256.71) |
| முதலீட்டுப் பயன்கள் | | 4,469,934.05 | 8,476,056.02 |
| முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம் | | **(47,350,743.80)** | **(1,858,206.17)** |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம் | | | |
| பணிக்கொடை செலுத்தல் | | (73,425.00) | - |
| மூலதனக் கொடைக பெறுகை | | 10,563,557.85 | 9,186,000.00 |
| நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசோட்டம் | | **10,490,132.85** | **9,186,000.00** |
| காசும், காசுக்குச் சமமானவைகளினதும் தேறிய குறைவு | | 18,348,529.03 | 15,721,433.28 |
| ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும் | | 23,697,526.73 | 7,976,093.45 |
| ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவையும் | 13 | **42,046,055.76** | **23,697,526.73** |

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
## 2016.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமைமாற்றம் பற்றிய கூற்று

(ரூபா)

| | மூலதனக் கொடை | மூலதன சேர்மம் | மீள்மதிப்பீட்டுச் சேர்மம் | தடுத்து வைக்கப்பட்ட உழைப்புக்கள | மொத்த உரிமையாண்மை |
|---|---|---|---|---|---|
| 2015 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 141,356,976.54 | 2,153,119.00 | 13,000,000.00 | (29,078,694.04) | 127,431,401.50 |
| முன்னைய ஆண்டின் தவறுகளை சீர் செய்தல் | - | - | | (6,418,707.79) | (6,418,707.79) |
| 2015 சனவரி 01 ஆம் திகதிக்கு சீராக்கல் செய்த மீதி | 141,356,976.54 | 2,153,119.00 | 13,000,000.00 | (35,497,401.83) | 121,012,693.71 |
| விரிவான வருமானம | | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | - | 11,606,497.00 | 11,606,497.00 |
| ஏனைய மொத்த விரிவான வருமானம் | 9,186,000.00 | - | - | - | 9,186,000.00 |
| 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி | 150,542,976.54 | 2,153,119.00 | 13,000,000.00 | (23,890,904.83) | 141,805,190.71 |
| முன்னைய ஆண்டின் தவறுகளை சீர் செய்தல் | - | - | - | - | - |
| 2016 சனவரி 01 ஆம் திகதிக்கு சீராக்கல் செய்த மீதி | 150,542,976.54 | 2,153,119.00 | 13,000,000.00 | (23,890,904.83) | 141,805,190.71 |
| விரிவான வருமானம் | | | | | |
| ஆண்டுக்கான இலாபம் | - | - | - | 31,382,422.16 | 31,382,422.16 |
| ஏனைய மொத்த விரிவான வருமானம | 10,563,557.85 | - | - | - | 10,563,557.85 |
| 2016 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான மீதி | 161,106,534.39 | 2,153,119.00 | 13,000,000.00 | 7,491,517.33 | 183,751,170.72 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

மගේ අංකය / எனது இல. / My No. விடைவை/சீ/என்சீபீஏ/2016/01/04 | මබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 2018 பெப்ரவரி 14 திகதி

தலைவர்,
தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,

**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 22(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று 2017 செப்தெம்பர் 22 திகதி அதிகார சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கு நியமம் 07

மீளாய்வு செய்யாமையால் நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்தை வருடாந்தம் ரூபா 29,401,177 கிரயத்தையுடைய நிலையான சொத்துக்களுக்கு முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02

(i) யுனிசெப் மானியம் எனக் கிடைத்திருந்த ரூபா 8,400,544 தொகை பெறுமதியான சொத்துக்களின் பெறுமதியினை காசுப்பாய்ச்சல் கூற்றில்

முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல் எனக் காட்டப்பட்டிருந்தது.

(ii) 2016 ஆண்டின் போது உண்மையாகவே கிடைத்திருந்த மானியங்களின் பெறுமதி ரூபா 4,167,000 தொகை எனினும், காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளின் மூலம் உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 10,563,558 தொகை எனக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறையல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக திறைசேரியில் இருந்து அதிகாரசபைக்கு கிடைத்திருந்த அரச மானியம் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 161,106,534 தொகை மற்றும் அதன் மூலம் கொள்வனவு செய்திருந்த ரூபா 181,809,545 கிரயம் நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும், அரச மானியங்களை முறையான அடிப்படையில் இலாபம் மற்றும் நட்டம் என இனங்கண்டு கணக்கீடு செய்வதற்காக கொள்கை ஒன்றினை இனங்கண்டிருக்கவில்லை.

(ஆ) யுனிசெப் மானியம் என மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 8,400,544 இற்கான மோட்டார் சைக்கிள் ஒன்று மற்றும் கணனிகள் மற்றும் துணைக்கருவிகள் முறைப்படியான அடிப்படை என இலாப நட்டங்கள் என இனங்காண்பதற்கு பதிலாக அதற்காக கணிக்கப்பட்ட ரூபா 2,003,986 தொகைக்கான பெறுமானத் தேய்வு, பெறுமானத் தேய்வுக் கணக்குகளில் இருந்து அகற்றி யுனிசெப் மானிய கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 15 செயற்திட்ட நிதியங்கள் தொடர்பாக நீண்டகாலமாக காணப்பட்ட கணக்கீடு செய்யும் தவறு மற்றும் மானியமாக கிடைத்திருந்த தொகையை விட மிகையான தொகை ஒன்று செலவிடப்பட்ட காரணத்தினால் 07 செயற்திட்ட நிதியங்களில் ரூபா 1,757,931 இற்கான வரவு மீதிகள் ஏற்பட்டிருந்தது. 8 நிதியங்களின் கூட்டுத்தொகை ரூபா 7,682,494

தொகைக்கான செலவு மீதிகளில் இருந்து அந்த வரவு மீதிகளை சமப்படுத்தி ரூபா 5,924,567 தொகை நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டு தொடர்பாக ரூபா 225,167 இற்கான பெறுமானத் தேய்வினை மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வுக் கணக்கிற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தமையினால் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வுச் செலவு மற்றும் மிகை அதே தொகையினால் முறையே மிகையாகவும் மற்றும் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதி அளவில் தீர்க்கப்படாமல் காணப்பட்ட ரூபா 21,457,789 இற்கான முற்பணத்தினை பெற வேண்டிய மீதி ஒன்று என நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட செலவுக் கணக்குகளும் வரவு வைத்து அட்டுறு செலவு கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த நடைமுறை பொறுப்புக்கள் மற்றும் ஆண்டிற்கான மிகை முறையே அப் பெறுமதியினால் மிகையாக மற்றும் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தன.

(ஈ) முன்னைய ஆண்டு தொடர்பான மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்திருந்த ரூபா 1,215,000 இற்கான சுனாமி நலன் பெறுவோருக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள், மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்று என கணக்கீடு செய்திருந்தமையால் மீளாய்வாண்டின் மிகை அதே தொகையினால் குறைந்திருந்தது.

(உ) 2017 மார்ச் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த பட்டப் பின் படிப்பு பட்டதாரி பாடநெறிக்காக 2016 திசெம்பர் 29 திகதியிடப்பட்ட காசோலை ஒன்றின் மூலம் ரூபா 7,040,000 தொகை பிற்கொடுப்பனவு என கணக்கீடு செய்வதற்கு பதிலாக மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான பணிக்கொடைச் செலவு ரூபா 2,040,164 தொகை எனினும், நிதிக்கூற்றுக்களில் அதனை ரூபா 1,334,852 என காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான மிகை ரூபா 705,312 இனால் மிகையாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

(எ) 2000 ஆண்டின் போது குத்தகை அடிப்படை பெற்றுருந்த செலுத்தியிருந்த காணி ஒன்றிற்காகச் செலுத்தியிருந்த ரூபா 8,422,460 தொகைக்கான குத்தகைத்

தொகை வருடாந்தம் ரூபா 168,449 வீதம் 50 வருடங்கள் கிரமமாக குறைக்கப்பட வேண்டுமெனினும், கடந்த 16 ஆண்டுகளிலும் அவ்வாறு கிரமமாகக் குறைத்தல் நடைபெற்றிருக்கவில்லை. அதனை சரி செய்வதற்காக கடந்த 16 ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்கான மொத்தக் கிரமமாக குறைத்தல் ஆகிய ரூபா 2,863,636 தொகை ஆண்டிற்கான செலவு என கணக்கீடு செய்திருந்தமையால் ஆண்டிற்கான மிகை ரூபா 2,695,187 இனால் குறைவாகக் கணக்கிடப்பட்டிருந்தது.

(ஏ) காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு அல்லாத சீராக்கங்கள் செயற்படு இலாபத்துடன் சீராக்கம் செய்யும் போது ரூபா 2,062,404 தொகைக்கான பெறுமானத் தேய்வு மற்றும் ரூபா 242,460 தொகைக்கான பணிக் கொடைகள் மிகையாகச் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது

(ஐ) 2016 திசெம்பர் 30 திகதி புத்தகம் அச்சிடுவதற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 148,295 தொகைக்கான முற்பணம் என கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்றாகக் கணக்கீடு செய்யப்படடுள்ளது எவ்வாறாயினும், இந்தக் காசோலை 2017 மே 18 திகதி இரத்து செய்யப்பட்டிருந்தது என மேலும் அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இடையே மேற்கொள்ளப்படும் இடைக் கொடுப்பனவுகள் உரிய முறையில் பதிவு செய்யப்படாமையால் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் நிதியத்திலிருந்து அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய மீதி ரூபா 5,889,373 இற்கான மற்றும் அதிகாரசபையிலிருந்த நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதியில் ரூபா 3,256,982 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,611,904 தொகை 2 வருடங்களை விட மிகையான காலம் முதல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் தொடர்ந்து முன்கொண்டு வந்து காணப்பட்டது.

(ஆ) சிறுவர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையில் இருந்து ரூபா 6,034,511 தொகை 03 வருடங்களை விட மிகையான காலம் முதலும், ரூபா 700,000 தொகை 02 வருடங்களுக்கு முன்னிருந்தும், நிதியத்தில் இருந்து அதிகாரசபைக்கு கிடைக்க வேண்டிய மீதியில் இருந்து ரூபா 6,882,200 தொகை 03 வருடங்களுக்கு முன்னர் இருந்தும் ரூபா 5,146,500 தொகை 02 வருடங்களுக்கு முன்னர் இருந்தும், காணப்பட்ட போதிலும் அவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 2,398,636 தொகைக்கான 07 மீதிகள் 01 முதல் 04 வருடங்கள் வரையான காலம் முதல் நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படாமல் முன்கொண்டுவரப்பட்டு காணப்பட்டது.

**2.4 சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள்விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) | நிதிப்பிரமாணம் 104(1),(3),(4) | மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த 04 வாகன விபத்துகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | வாகன விபத்துக்கள் / சேதங்கள் பதிவேடு இற்றை வரைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

8

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணங்கள் 137(5), 215 | பண்டங்கள் / சேவைகள் கட்டளையிடப்பட்டு அவை கிடைத்ததென உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவுகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமெனினும், அதிகார சபைக்கு கிடைத்திருக்காத கூட்டுத்தொகை ரூபா 4,920,464 தொகைக்கான பண்டங்கள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 திகதி 07 காசோலைகள் எழுதப்பட்டிருந்தன. |
| (iv) | நிதிப்பிரமாணம் 325 | மீளாய்வாண்டின் போது முத்திரைகளுக்காக ரூபா 400,445 தொகை செலவிடப் பட்டிருந்ததுடன், பெற்றுக்கொண்ட முத்திரைகள் தொடர்பாக பதிவேடு ஒன்று அல்லது உள்ளக கட்டுப்பாடு கொள்கையொன்று கடைபிடித் திருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 371(அ) (திருத்திய) 2015 ஜுலை 14 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 21,457,789 இற்கான தீர்க்கப்படாத முற்பணங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் ரூபா 360,682 தொகை கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இருந்து காணப்பட்ட தீர்க்கப்படாத முற்பணங்களாகும். |
| (vi) | நிதிப்பிரமாணம் 751(1),(3),(4) | மீளாய்வண்டின் போது ரூபா 2,256,750 தொகை செலவிடப்பட்டு துண்டுப் பிரசுரங்கள் / ஸ்டிகர் புத்தகங்கள் அச்சிடப்பட்டிருந்த போதிலும், அந்த அச்சு பத்திரங்களின் பெறுவனவு மற்றும் வினியோகங்களுக்காக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2004 மே 12 திகதிய 4/0427/020/002 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | இலத்திரனியல் / அச்சு ஊடகங்களுக்காக வழங்கப்படும் அறிவித்தல்கள் அரசு ஊடக நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனினும், அதிகாரசபையினால் ரூபா 191,025 தொகை செலுத்தி தனியார் |

| | |
|---|---|
| | நிறுவனம் ஒன்றின் மூலம் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. |
| (இ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 39,401,325 தொகை பெறுமதியான கணனி உபகரணங்கள் மற்றும் மென்பொருள்கள் அதிகாரசபைக்கு சொந்தமாகக் காணப்பட்ட போதிலும் அதற்கான தனியாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

முறையான அங்கீகாரம் ஒன்று இன்றி வருடாந்தம் மீண்டுவரும் செலவுகள் மேற்கொள்வதற்காக திறைசேரியில் இருந்து பெற்றுக்கொள்ளும் பணத்தில் இருந்து ஊழியர்கள் ஓய்வுபெறும் போது செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடை செலவுகள் மேற்கொள்வதற்காக பல வருட காலம் முதல் சேமிப்பு கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 877,237 தொகை வைப்புச் செய்யப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அம் மீதி ரூபா 6,259,704 ஆக இருந்தது.

## 3. நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் நிதி விளைவுகள் ரூபா 29,701,311 இற்கான மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,011,985 தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 30,713,296 இற்கான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. தேசிய திட்டங்களை செயற்படுத்துவதற்காக கிடைத்திருந்த ஏற்பாடுகள் ரூபா 108,812,159 இனால் அதிகரித்திருத்தல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளில் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது அதிகாரசபையின் 2014 மற்றும் 2016 ஆண்டுகளின் போது முறையே ரூபா 3,631,016 இற்கான மற்றும் ரூபா 29,701,301 இற்கான மிகைகளும் 2012,2013

மற்றும் 2015 ஆண்டுகளின் போது முறையே ரூபா 12,058,337 , ரூபா 1,302,856 மற்றும் ரூபா 1,011,985 ஆக பற்றாக்குறைகளும் அவதானிக்கப்பட்டன. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத் தேய்வு சீராக்கல் செய்த பின்னர் 2012 ஆண்டின் போது ரூபா 36,258,920 தொகைக்கான பங்களிப்பு மீளாய்வாண்டளவில் ரூபா 251,336,754 வரை வளர்ச்சியடைந்திருந்தது.

**3.2 நிறுவனத்திற்கு எதிராக காணப்பட்ட சட்ட சம்பவங்கள்**

அதிகாரசபையில் கடமையாற்றிய பெண் கணக்காளர் 2010 ஆகஸ்ட் 25 திகதி முதல் வேலை இடை நிறுத்தப்பட்டிருந்ததுடன் அவருக்கு எதிராக நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றுகை**

1998 இன் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம், சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுத்தல் மற்றும் அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகிய சிறுவர்களை பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு பரிகாரம் காண்பதற்காக தேசிய கொள்கையொன்றினை தயாரித்தலும், அதனை ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்கு தேவையான சட்ட மற்றும் நிருவாக திருத்தங்களை விதைந்துரைப்பதற்கும், சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் செயற்பாடுகளுக்காக அவ்வாறான துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகியவர்களைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களின் உரிமையை பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்துச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளும், விழிப்புணர்வை ஏற்படுத்தலும், சட்டத்தை அமுல்நடத்துவதை ஒழுங்குபடுத்தலும், விசாரணை மற்றும் குற்றவியல் வழக்குக்கு விடயங்கள் தொடர்பான முன்னேற்றத்தை ஒழுங்குபடுத்தலும், அதிகாரசபையின் முக்கியமான செய்பணிகளாகும். இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நிறுவப்பட்டு 19 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், தேசிய சிறுவர் பாதுகாப்பு கொள்கையை சட்டரீதியாக்குவதற்கு மீளாய்வாண்டின் போதும் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் சேவ் த சில்ரன் (Save the Children) செயற்திட்டத்தின் கீழ் 2016 ஆண்டிற்கான ஒதுக்கப்பட்டிருந்த

ரூபா 23,000,000 தொகையில் ரூபா 10,000,000 தொகை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு 2016 ஆகஸ்ட் 24 திகதி வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் எதிர்பார்த்த கருமங்களுக்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 7,969,130.80 தொகையாக இருந்ததுடன், 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பயன்படுத்தப்படாமல் ரூபா 2,030,866 தொகை மீண்டும் அமைச்சுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

(இ) சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, இலங்கை தொழில்பயிற்சி அதிகாரசபை மற்றும் தேசிய பயிலுனர் சபையுடன் ஒன்றிணைந்து சிறுவர் பாதுகாப்பு பாடநெறியொன்று மீளாய்வாண்டின் போது நடத்துவதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் அப்பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருக்காத போதிலும் அந்த 02 நிறுவனங்களுக்காக 2016 திசெம்பர் 31 திகதி ரூபா 10,333,000 தொகை செலுத்தியிருந்தது.

(ஈ) அதிகார சபைக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக தீர்வு பெற்றுக்கொடுக்கும் முன்னேற்றம்

(i) 2016 ஆண்டின் போது அதிகார சபைக்கு 9,540 முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் அவற்றில் 2,845 முறைப்பாடுகள் மாத்திரமே தீர்க்கப்பட்டிருந்தது. கிடைத்திருந்த முறைப்பாடுகளில் 70 சதவீத முறைப்பாடுகள் தீர்த்து முடிக்கப்பட்டிருக்காததுடன் அம்முறைப்பாடுகள் தொடர்பாக எடுத்திருந்த கட்டங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலைமைகள் என்பவற்றை தெளிவாக இனங்காணக்கூடிய விதமாக தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப்பகுதியில் கிடைத்திருந்த 48,417 முறைப்பாடுகளில் மீளாய்வாண்டளவில் தீர்க்கப்படாமல் முன்கொண்டு சென்றிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை ரூபா 24,833 ஆகும். அவை மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையின் 51 சதவீதமாகும்.

(iii) அதிகாரசபைக்கு வருடாந்தம் கிடைத்திருந்த முறைப்பாடுகளில் வரையறுக்கப்பட்ட தொகையொன்று மாத்திரம் அவ்வாண்டின் போது தீர்க்கப்பட்டிருந்த முறைப்பாடுகள் தொடர்பான தகவல்களை பிராந்திய மற்றும் மாவட்ட உத்தியோகத்தர்களினால் அறிவிக்கப்படாமை மற்றும்

அவர்களினால் மேற்கொள்ளப்படும் தகவல்கள் அழைத்தல் மற்றும் விசாரணைகள் தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் மேற்பார்வைகள் உரியமுறைப்படி மேற்கொள்ளப்படாமையால் தீர்க்கப்படாதிருந்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை துரிதமாக அதிகரித்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக விவாதப் போட்டித் தொடர் ஒன்று நடாத்தப்பட்டிருந்ததுடன், அதனது இறுதிப் போட்டி 2016 நவம்பர் 04 திகதி நடாத்தப்பட்டிருந்தது. அதற்கு உடன் நிகழ்வாக 04 தலைப்புக்களின் கீழ் 60,000 துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு விநியோகிப்பதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 244,000 தொகை செலவிடப்பட்டு அத்துண்டுப் பிரசுரங்கள் அச்சிடுவதற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் விவாதம் நடைபெற்று 2 ½ மாதங்களின் பின்னர் அதாவது, 2017 ஜனவரி 25 திகதி அத் துண்டுப் பிரசுரங்கள் நிறுவனத்திற்கு கிடைத்திருந்தது.

(ஆ) சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக விளிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் 03 ஆய்வு பொருளின் கீழ் 15 விநாடி காலத்தில் ஒலிபரப்புவதற்காக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் 09 அறிவித்தல்கள் தயாரிப்பதற்காக பெறுகைகளை நடைமுறைக்கு புறம்பாக தனியார் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டு ரூபா 3,974,471 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 1,108,651 தொகை செலவிடப்பட்டு அறிவித்தல் மூலம் "சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பாக சிறுவர்கள் கவனமாக இருக்க வேண்டும்" என்ற ஆய்வு பொருளின் கீழ் காணப்பட்ட அறிவித்தல் போதியளவு செய்தி ஒன்றினை பெற்றுக்கொடுக்கவில்லை எனவும், ஊடகங்களின் மூலம் ஒலிபரப்பு செய்வதற்கு முன்னர் பாடசாலை மட்டத்தில் மதிப்பாய்வு ஒன்றிற்கு ஆளாக்குவதற்கு முடியுமாக இருந்தும் கூட அவ்வாறு செய்யாமல் ரூபா 17,622,874 தொகை செலவிடப்பட்டு தொலைக்காட்சி, வானொலி ஊடகங்களின் மூலம் அவ் அறிவித்தல்கள் ஒலிபரப்பப்பட்டிருந்தது.

(இ) சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக விளிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக வழிகாட்டல் கைநூல் ஒன்று தயாரிப்பதாகும். அந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்குபடுத்தலுக்கு அறிவுரை வழங்குவதற்கான

நடைமுறை ஒன்றினை தயாரிப்பதற்கான ஆலோசனைகள் பெற்றுக்கொள்வதற்காக இரண்டு நபர்களுக்கு 2016 திசெம்பர் 31 ஆம் திகதி முறையே ரூபா 698,689 தொகை மற்றும் ரூபா 750,000 தொகைகள் செலுத்தப்பட்டிருந்த போதிலும், உடன்பட்ட காலம் முடிவடைந்திருந்தபோதிலும் அவ்வறிக்கைகளை பெற்றிருக்கவில்லை.

(ஈ) சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தேசிய கொள்கை ஒன்றினை வரைவு தயாரித்தல் மற்றும் அது தொடர்பாக கூட்டிணைப்புச் செய்வதற்காக ஆலோசனைகள் பெறுவதற்காக உசாத்துணை சேவையொன்று ரூபா 303,000 தொகை செலுத்தி பெற்றுக்கொள்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும், அச் சேவையினையும் பெற்றிருக்கவில்லை.

(உ) சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக 2005 – 2015 இற்கு இடைப்பட்ட ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் தொடர்பாக விமர்சனங்களுடனான நூல் பெயர்பட்டியல் ஒன்று தயாரிப்பதற்காக 2016 ஜுலை 07 திகதி வெளிசாராருக்கு ரூபா 385,200 இற்கான முற்பணமொன்று செலுத்தியிருந்ததுடன், 06 மாதங்களுக்கு பின்னர் அத்தொகை அதிகார சபைக்கு திருப்பி செலுத்தப்பட்டிருந்தது. இந்த விடயத்தை வேறு ஒரு சாரார் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆண்டின் போது 85 அச்சிடப்பட்ட வருடாந்த அறிக்கைகளும், 370 சிறுவர் பாதுகாப்பு மற்றும் புணர்வாழ்விற்கான திட்டமிடப்பட்ட கொள்கைப் புத்தகங்களும், 36 துண்டுப் பிரசுரங்கள் மற்றும் 24 கலண்டர்களும் 2013 ஆண்டின் போது ரூபா 144,480 தொகை செலவிடப்பட்டு அச்சிடப்பட்ட 25,000 துண்டுப் பிரசுரங்களும், 2016 ஆண்டின் போது ரூபா 131,000 தொகை செலவிடப்பட்டு அச்சிடப்பட்ட 35,000 ஸ்டிகர்களும், 2017 மே 15 திகதி வரை எதிர்பார்த்த குறிக்கோள்களுக்காக விநியோகம் செய்யப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) இலங்கை சிறுவர்களுக்காக பகல் பாதுகாப்பு சேவை வழங்கல் தொடர்பாக தற்போதைய நிலைமை தொடர்பாக தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக ஆய்வு ஒன்று மேற்கொள்வதற்காக பிரேரணைகள் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 267,371 தொகை செலவிடப்பட்டு 2016 ஆகஸ்ட் 16 திகதி செய்தித்தாள்

அறிவித்தல் ஒன்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. பின்னர் அந்த கருத்தினை மாற்றியமைத்து குறிப்பிட்ட தகவல்களை அமைச்சின், நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் அதிகாரசபையினால் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் மூலம் பெற்றுக்கொள்வதற்கான தீர்மானத்திருந்த காரணமாக இந்த செய்தித்தாள் அறிவித்தல்களுக்காக செலவிடப்பட்ட செலவு சிக்கனமற்ற செலவு ஒன்றென அவதானிக்கப்பட்டது.

(இ) சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக முறைப்பாடு அறிவிக்கும் முறைமை மீளாய்வு செய்வதற்காக ஆலோசனை பெற்றுக் கொள்வதற்காக வெளிசாராருக்கு ரூபா 979,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் ஆலோசனை அறிக்கையில் அடங்கியுள்ள விதப்புரைகள் சிக்கலான மற்றும் நடைமுறை சாத்தியமற்றவை என சுட்டிக்காட்டி அமுல்நடத்தியிருக்கவில்லை.

## 4.4 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதித் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 527 மற்றும் உள்ளவாறான பதவியணியினர் 389 ஆகக் காணப்பட்டமையினால் 138 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. அவற்றில் 108 பதவிகள் பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்களாகக் காணப்பட்டதுடன், இந்த பதவிகளில் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள 252 உத்தியோகத்தர்களால் நடைபெறும் செயலாற்றுகை தொடர்பாகவும் முறையான மேற்பார்வையொன்று நடைபெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகார சபையின் அத்தியவசியமான சிரேஷ்ட நிலை 5 முக்கிய பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படல், அவ்விடயங்களை திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வைகள் உரிய முறையில் நடைபெறாமைக்கு காரணமாக இருந்தது என அவதானிக்கப்பட்டது. நிறுவனத்தின் கணக்காளர் மற்றும் நிதி முகாமைத்துவப் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டமையால் நிறுவனத்தில் நிதி முகாமைத்துவ விடயங்கள் முறைப்படி மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

(இ) நிறுவனத்தின் விடயங்களை மேற்கொள்வதற்காக சுமார் 10 பிரிவுகள் காணப்பட்ட போதிலும் அங்கீகரிக்கப்பட்ட அலுவலக உதவியாளர்கள் எண்ணிக்கை 03 மாத்திரம் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

2009 ஜுன் 09 திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இலக்கம் DMA/2009(1) இல் 3 ஆம் பந்தியின் பிரகாரம் கருமங்களை நிறைவேற்றுவதற்காக போதியளவு பதவியணியினர் உள்ளக கணக்காய்வு பிரிவுகளுக்காக இணைக்கப்படாத காரணத்தினால் உள்ளக கணக்காய்வினை வரையறுப்பதற்கு நேரிட்டிருந்தது.

### 5.2 பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் அவ்வப்போது அதிகார சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | அட்டுறு செலவுகள் / முற்கொடுப்பனவுகளுக்கான சீராக்கல்கள், பெறுமானத்தேய்வு ஒதுக்கம், நாள்வழிக்குறிப்புக்கள் பதிதல் என்பன உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்காமை. |
| (ஆ) முற்பணங்கள் | முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்தல் முறையான கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட்டிருக்காமை. |

(இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு

i. முறைப்பாடுகள் மற்றும் தீர்ப்புக்கள் வழங்குவதில் தாமதம் மற்றும் நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக முன்னேற்றங்கள், தொடர் செயல் நடவடிக்கை என்பன முறையான மேற்பார்வை மேற்கொள்ளப்படாமை.

ii. முறையான திட்டமிடலொன்று இன்றி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்நடாத்துதல் மற்றும் திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை முறையாக செயற்படுத்தப்படாமை.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ

கணக்காய்வாளர் தலைமை அதிபதி